விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## சங்குநாதம்

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

சங்கு 24
ஒலி 104 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 19 ஞாயிற்றுக்கிழமை (02.04.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### தமிழ்ப் பண்பாட்டு அழிப்புக்கு எதிராக

# வடக்கு, கிழக்கில் மாபெரும் போராட்டம்

### 7 தமிழ்க் கட்சிகள், 22 அமைப்புகள் கூட்டாக தீர்மானம்



*(யாழ்ப்பாணம்) தமிழின வரலாற்றுப் பண்பாட்டு அடையாளங்கள் அழிப்பு மற்றும் மத வழி பாட்டுத் தலங்கள் அழிப்பு என்பவற்றுக்கு எதிராக வடக்குக் கிழக்குத் தழுவிய மாபெரும் போராட்டம் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.* *(19ஆம் பக்கம் பார்க்க)*

## சிவலிங்கம் மீள் பிரதிஷ்டை தொடர்பில்

### அமைச்சர்கள் தலைமையில் இன்று முக்கிய முடிவு

(வவுனியா)

வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய சிவலிங்கம் மீள் பிரதிஷ்டை தொடர்பில் அமைச்சர்கள் தலைமையில் இன்று முக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளன. 19

### சீனி, பருப்பு, மாவின்

## விலைகள் குறைப்பு

(கொழும்பு)

வெள்ளைச் சீனி, பருப்பு மற்றும் கோதுமை மாவின் விலைகள் குறைந்துள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

220 ரூபாயாக இருந்த ஒரு கிலோ வெள்ளைச் சீனியின் விலை 200 ரூபாயாகவும் 340 ரூபாயாக இருந்த ஒரு கிலோ பருப்பு தற் 19

### ஆனைக்கோட்டையில்

## குடும்பப் பெண் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

சாவல்கட்டு ஆனைக் கோட்டையில் குடும்பப் பெண் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள் 19

### அரசு நிதியை விடுவித்தால் ஏப்ரல் 25க்கு முன்னர் தபால்மூல வாக்களிப்பு

3ஆம் பக்கம் பார்க்க

### நெடுங்கேணி வெடுக்குநாறி மலையில்

# சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்ய

## தொல்லியல் திணைக்களம் தடை



**(வவுனியா) நெடுங்கேணி வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவலிங்கம் மற்றும் ஏனைய விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்ய ஏற்பாடாகியிருந்த நிலையில் அதற்கு தொல்லியல் திணைக்களம் தடை போட்டுள்ளது.**

சேதமாக்கிய வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இன்று அதிகாலை அதே இடத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்ய ஆலய நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு புதிய சிவலிங்கம் எடுத்துச் செல்லப்பட்டது.

மேலும் சிவன், அம்மன், பிள்ளையார் மற்றும் வைரவர் விக்கிரகங்கள் வழிபடப்பட்ட இடத் 19


## யாழ். - தமிழக பயணிகள் கப்பல் சேவை விரைவில்

### உறுதிப்படுத்தியது தமிழக அரசு

யாழ்ப்பாணத்துக்கும் தமிழகத்துக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படுவதை தமிழக அரசாங்கமும் நேற்று உறுதிப் படுத்தியுள்ளது.

தமிழ்நாடு சட்டப் பேரவையில் பாதீடு விவாத கூட்டத் தொடரில் கலந்துகொண்ட தமிழகத்தின் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். (ம-7,9)

## இன, மத ரீதியிலான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் - சஜித்



(கொழும்பு)

"இலங்கையில் இன, மத ரீதியில் எழுந்துள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டும். அப்போதுதான் நாடு முன்னேற்றப் பாதையில் பயணிக்க முடியும். தீர்வு இல்லையேல் நாட்டுக்கு முன்னேற்றம் 19



## நான் ஜனாதிபதியாக இருக்கும்வரை சட்ட ஒழுங்கை எவரும் மீற முடியாது

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

நான் ஜனாதிபதியாக இருக்கும் காலத்தில் சட்டம் ஒழுங்கை மீற எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

முப்படைகளினதும் தலைவரான ஜனாதிபதி, அநுராதபுரத்திலுள்ள விமானப்படை முகாமில் 19

## திருமணமாகி 10 நாட்களில் இளம் குடும்பஸ்தர் மரணம்

### சுழிபுரத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

திருமணமாகி 10 நாட்களில் இளம்குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் சுழிபுரம் மேற்கு குடாக்கனையில் இடம்பெற்றுள்ளது.

இதில் இராசா பரணிதரன் (வயது-32) என்ற இளம்குடும்பஸ்தரே 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொர்க்கம் திருமணசேவை

1. லண்டனில் வசிக்கும் 34 வயதுடைய மணமகனுக்கு மணமகள் தேவை
2. இலங்கையில் வசிக்கும் 34 வயதுடைய Development officer மணமகனுக்கு உள்ளூரில் (உத்தியோக) மணமகள் தேவை.
3. கனடாவில் வசிக்கும் 44 வயதுடைய கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த கணவனை இழந்த மணமகளுக்கு மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு (15120)

**0014166661855**
**077 887 6969**

## நாகபூஷணி திருமண சேவை

பல்லாயிரக்கணக்கில் மணமக்கள் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

**264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**

**021 222 9306, 077 138 7596**
**071 999 9306** (C-6277)

## வெல்டர் தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள வேலைத் தளத்தில் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள வெல்டர் தேவை. யாழ் நகருக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை.

தொடர்புகளுக்கு (15119)

**077 445 8582**

## மணிவிழா வாழ்த்து



திருமதி காந்திமதி சோதிநாதன்
(ஆசிரியர்)
SP.Trd.Science

சேவை விபரம்
20.01.1988 - 31.12.2010 - யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி.
01.01.2011 - 20.09.2012 - யா/நல்லூர் சி.சி.த.க பாடசாலை
24.09.2012 - 02.04.2023 - யா/பெரியபுலம் ம.வி

எமது பாடசாலையில் சேவையாற்றி ஓய்வுபெறும் மணிவிழா நாயகியை வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்**

BEST WISHES (15122)

## வாடகைக்கு உண்டு

பலாலி வீதி இல.24, 2ம் ஒழுங்கை யாழ்ப்பாணத்தில் ஒருவர் அல்லது இருவர் தங்குவதற்கு அறை வாடகைக்கு உண்டு.

குறிப்பு:- தொழில் புரிபவர்களுக்கு மட்டும்

தொடர்புக்கு (15115)

**077 996 8835**

## வேலைவாய்ப்பு

தனியார் அலுவலகம் ஒன்றில் பணி புரிவதற்கு பெண் ஊழியர்கள் தேவை.
தகைமைகள் : GCE O/L, A/L, Computer knowledge

**077 448 1790**
**076 642 7915**

இல.338, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (15117)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி வழிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் 04 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.**

- A9 வீதியிலிருந்து இரண்டாவது காணி
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- கைதடி சந்தியிலிருந்து 500m தூரம்
- A9 வீதியிலிருந்து 50m தூரத்தில் காணி உள்ளது.

**076 436 5814, 076 739 0413** (15110)

## வெளிநாடு செல்வது பற்றி சிந்திக்கின்றீர்களா? இலவச பயிற்சி பட்டறையில் இணைந்து கொள்ளுங்கள்

மேற்படிப்புக்காக அல்லது வேலைவாய்ப்பினை பெற்றுக்கொண்டு வெளிநாட்டிற்கு செல்வதற்கு சிந்திக்கின்றீர்களா? (Student visa / work visa ) இதனை எவ்வாறு செயற்படுத்துவது? யார் மூலமாக நடைமுறைப்படுத்தலாம் என்று குழப்பமாக இருக்கின்றதா? கவலையை விடுங்கள் உங்கள் அனைத்துவிதமான சந்தேகங்களுக்கும் தீர்வைப்பெற Hybrid International Hub (pvt) Ltd இனால் அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 08.04.2023 (சனிக்கிழமை) காலை 9.30 தொடக்கம் 12.30 வரை அலுவலக கேட்போர் கூடத்தில் நடாத்தப்படவுள்ளது.

பங்குபற்றி பயன் பெறவிரும்புவோர் தங்களது வரவினை கீழ்வரும் தொலை பேசிக்கூடாக எதிர்வரும் 05.04.2023 புதன்கிழமைக்கு முன்னர் பதிவுசெய்து உறுதிப்படுத்திகொள்ளவும்.

பெற்றோர்கள், மாணவர்கள் ஆர்வமுள்ள அனைவரும் பங்குபற்றி பயன் பெறுங்கள். (C-6273)

**Hybrid International Hub (pvt) Ltd**
**No. 36, VaithilingamThuraisamy Road**
**Tp: No - 021 222 1265 / 076 250 0098**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் 1998-2001 வரை மிகவும் திறம்படப் பதவி வகித்த ஓய்வுநிலை அதிபர்

அமரர் **மா.குலசேகரம்**

அவர்களின் திடீர் மரணச் செய்தியறிந்து துயர் கொள்வதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களையும் ஆறுதலையும் எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் சார்பாக தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பழையமாணவர் சங்கம் (தாய்ச்சங்கம்)**
**யா/கோண்டாவில் இராமகிருஷ்ண.ம.வி** (C-6274)

## மரண அறிவித்தல்



தோற்றம் 09 - 11 - 1965
மறைவு 23 - 03 - 2023

### கணேசன் பரமானந்தன்

காட்டடைப்பு வீதி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டன் East Ham ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கணேசன் பரமானந்தன் அவர்கள் 23.03.2023 வியாழக்கிழமை அன்று லண்டனில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமானந்தன் - இராஜேஸ்வரி தம்பதியினரின் அருமை மகனும் கிருபாகரன் - சந்திரா தம்பதியின் மருமகனும் ரேணுகா அவர்களின் அன்புக் கணவரும் அஷ்மினி, ஸ்ருதி, சாந்தவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் நவநீதன், பிரதீபன், ரூபா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.04.2023 இன்று இலங்கை நேரப்படி பி.ப 4.00 மணிக்கு லண்டனில் நடைபெறவுள்ளது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.துஷி (15121) குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி

பரியோவான் உயர்தரம் 89 அணி நண்பர் Dr.எஸ். ஜெய்சங்கர் (UK) அவர்களின் அன்புத் தந்தை



அமரர்
**மு.க.சிவபாதலிங்கம்**
(முன்னாள் அதிபர், முன்னாள் பிரதி கல்விப் பணிப்பாளர், சித்த மருத்துவர்)

அவர்களின் இறுதிக் கிரியைகள் இன்று 02.04.2023 ஞாயிறு காலை 8 மணிக்கு இல.18/2,விதானையார் வீதி, சுண்டிக்குளியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.
பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆறுதலைத் தெரிவிப்பதுடன் அன்னாரின்ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 08.01.1931 மறைவு 29.03.2023 (C-6272)

**பரியோவான் A/L 89 அணி நண்பர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*2023 ஆம் ஆண்டுக்கான யாழ்.கல்விக் கண்காட்சி நேற்று வலம்புரி ஹோட்டலில் இடம்பெற்றது. குறித்த கண்காட்சி இன்றைய தினமும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.* **(படங்கள்- சிவசாந்தன்)**

## நிதி விடுவிக்கப்பட்டால்

# ஏப்ரல் 25 இற்கு முன்னர் தபால் மூல வாக்களிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புக்கு தேவையான நிதி ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு முன் விடுவிக்கப்பட்டால், ஏப்ரல் 25 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்படும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தபால் மூல வாக்களிப்பு நடைபெறுவதற்கு ஏப்ரல் 10 ஆம் திகதிக்குள் தபால் வாக்குச் சீட்டுகளை அரச அச்சகத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும் என தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 25 ஆம் திகதி தேர்தலை இரத்து செய்வது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை எனவும் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 10 ஆம் திகதிக்குப் பின்னர் நிலைமையைக் கருத்திற் கொண்டு முடிவு எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (4)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்.

## மகேந்திரன் செல்வராணி

தோற்றம் : 17.03.1947
மறைவு : 03.03.2023



இப்பூவுலகில் பிறப்பவர்கள் இறப்பது
உலக நியதியே!
ஆனாலும் உங்களின் இழப்பை
எம்மால் ஏற்க முடியவில்லையே
அன்பென்ற ஒற்றைச் சொல்லால்
எம்மை எல்லாம் கட்டுப்படுத்திய
உங்கள் நினைவுகள்
எம் உடலில் உயிருள்ளவரை
மறக்க முடியாதது
உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனை தினம் இறைஞ்சுகின்றோம்.

கோகுலவீதி,
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்

இங்ஙனம்
குடும்பத்தினர்.

(5108)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குருதிச் சோகையை நிவர்த்தி செய்தல் என்னும் தொனிப் பொருளிலான கண்காட்சி அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் நேற்று முன்னெடுக்கப்பட்டது. குறைந்த செலவில் எமது பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய இலைவகை மற்றும் காய்கறிகளுடன் போசாக்கினை அதிகரிப்பது தொடர்பான குறித்த கண்காட்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை ஆகியன இணைந்து முன்னெடுத்தனர். (படங்கள்- சிவசாந்தன்)



பிறக்கவிருக்கும் தமிழ் சித்திரைப்புத்தாண்டினை முன்னிட்டு சனி மாற்றத்திற்காக சனி பகவானுக்காக மஹாயாக உற்சவம் நேற்று வரலாற்று சிறப்புமிக்க யாழ். உடுவில் மருதனார் மட சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தில் பக்திபூர்வமாக நடைபெற்றது. (படம்-சிவசாந்தன்)

# மும்பை அணியில் பும்ராவுக்கு பதிலாக சந்தீப் வாரியர்





16 ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. மே 28 ஆம் திகதி வரை நீடிக்கும் இந்த கிரிக்கெட் திருவிழா சென்னை, மும்பை, அகமதாபாத், ஐதராபாத், டெல்லி உள்பட 12 நகரங்களில் நடத்தப்படுகிறது.

இந்த நிலையில் காயம் காரணமாக இந்த ஐ.பி.எல் தொடரிலிருந்து விலகிய மும்பை அணி வீரர் பும்ராவுக்கு பதிலாக மாற்று வீரரை மும்பை அணி நிர்வாகம் அறிவித்துள்ளது. அதன்படி வேகப்பந்து வீச்சாளர் சந்தீப் வாரியர் மும்பை அணியில் இணைந்துள்ளார்.

ரூ.50 லட்சத்துக்கு அவர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். மும்பை அணி தனது தொடக்க ஆட்டத்தில் பெங்களூரு அணியுடன் இன்று மோதுகிறது. (4)

# பட்டிங்கில் இன்னும் அதிக ஓட்டங்கள் எடுத்திருக்கலாம்- டோனி



16 ஆவது ஐ.பி.எல் தொடர் அகமதாபாத்தில் நேற்று முன்தினம் கோலாகலமாக தொடங்கியது. முதல் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் - குஜராத் டைட்டன்ஸ் மோதின. இப்போட்டியில் முதலில் பட்டிங் செய்த சென்னை 178 ஓட்டங்கள் எடுத்தது.

179 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய குஜராத் 19.2 ஓவரில் 5 விக்கெட் இழந்து 182 ஓட்டங்கள் எடுத்தது. இதன் மூலம் சென்னையை 5 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தில் குஜராத் அபார வெற்றி பெற்றது. போட்டிக்குப் பின் தோல்விக்கான காரணம் குறித்து சென்னை சுப்பர் கிங்ஸ் கப்டன் டோனி கூறியதாவது,

பனிப்பொழிவு இருக்கும் என்று அனைவருக்கும் தெரியும். பட்டிங்கில் இன்னும் ஓட்டங்கள் எடுத்திருக்கலாம். ருதுராஜ் மிகவும் சிறப்பாக செயற்பட்டார். அவர் பந்தை மிகவும் சிறப்பாக அடிக்கிறார். அவர் விளையாட்டை பார்க்க மகிழ்ச்சியாக உள்ளது.

அவர் பந்தை அடிக்க தயாராவதை பார்க்க மகிழ்ச்சியாக இருக்கிறது. இளம் வீரர்கள் களத்தில் இறங்குவது மிகவும் முக்கியம். ஹங்கர்ஹர் பந்து வீச்சில் வேகம் உள்ளது. பந்து வீச்சாளர்கள் அடுத்தடுத்து சிறப்பாக செயற்படுவார்கள் என தெரிவித்தார். (4)

# சென்னை அணிக்காக 200 சிக்சர்கள்

## டோனி சாதனை

ஐ.பி.எல் 16 ஆவது சீஸனின் முதல் போட்டியில் CSK மற்றும் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின. இந்தப் போட்டியில் குஜராத் அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் மகேந்திர சிங் தோனி 7 பந்தில் ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரியுடன் 14 ஓட்டங்கள் விளாசினார். அவர் அடித்த சிக்ஸர் CSK அணிக்காக தோனி அடித்த 200 ஆவது சிக்ஸர் ஆகும்.

இதன்மூலம் சென்னை அணிக்காக அதிக சிக்ஸர்கள் விளாசிய வீரர் என்ற சாதனையை தோனி ப்டைத்தார்.

மேலும் அவர் ஐ.பி.எல் தொடரில் 20வது ஓவரில் மட்டும் அதிக சிக்ஸர் விளாசிய வீரர் என்ற பெருமையையும் தோனி பெற்றார்.

அவர் இதுவரை 53 சிக்ஸர்களை 20 ஆவது ஓவரில் மட்டுமே அடித்துள்ளார்.

அதேபோல் கடைசி ஓவரில் 10 ஓட்டங்களுக்கு மேல் அடித்த வீரர்கள் பட்டியலிலும் அவர் முதல் இடத்தில் உள்ளார். தோனி 30 முறை கடைசி ஓவரில் 10 ஓட்டங்களுக்கு மேல் எடுத்துள்ளார். அவருக்கு அடுத்த இடங்களில் பொல்லார்ட் (18 முறை), ஹர்திக் பாண்ட்யா (13 முறை) உள்ளனர். (4)

# பார்சிலோனா அணியில் மீண்டும் லியனல் மெஸ்ஸி

ஆர்ஜென்டீனா கால்பந்து நட்சத்திரம் லியோனல் மெஸ்ஸி மீண்டும் பார்சிலோனா அணிக்கு திரும்புவது உறுதியாகியுள்ளது.

பார்சிலோனா அணியின் தற்போதைய மேலாளரான ஜாவி இது தொடர்பில் குறிப்பிடுகையில், மிக விரைவில் வீடு திரும்புங்கள் என மெஸ்ஸியிடம் கேட்டுக்கொண்டதாக தெரிவித்துள்ளார்.

கடந்த 2021 ஓகஸ்ட் மாதம் மெஸ்ஸி PSG அணியில் இணைந்தார். கால்பந்து களத்தில் அறிமுகமானது முதல், நீண்ட காலம் இணைந்திருந்த பார்சிலோனா அணியில் இருந்து வெளியேறி மெஸ்ஸி PSG அணியில் இணைந்தார்.

பொருளாதார ரீதியாக தமது கோரிக்கையை பார்சிலோனா நிர்வாகம் ஏற்க மறுத்ததை அடுத்தே, அந்த கடுமையான முடிவை மெஸ்ஸி எடுத்தார்.

ஆனால், மெஸ்ஸி எப்போது வேண்டுமானாலும் பார்சிலோனா அணிக்கு திரும்பலாம் எனவும், அவரை ஏற்க தாம் காத்திருப்பதாகவும் அந்த அணியின் த்லைவர் Joan Laporta தொடர்ந்து கூறி வந்தார்.

இதனிடையே, மெஸ்ஸியின் தந்தையும் பார்சிலோனா நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட தகவல் வெளியானது. இந்த நிலையில், மெஸ்ஸி மீண்டும் பார்சிலோனா அணிக்காக களமிறங்க இருப்பதை துணைத் தலைவர் ரஃபா யுஸ்டே உறுதிப்படுத்தியுள்ளார். (4)


**சைவ வித்தியா விருத்திச் சங்கம்**

**ஆண்டுப் பொதுக்கூட்டம் - 2023**

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் 22.04.2023 அன்று காலை 10.00 மணியளவில் நடைபெறும். யாப்பின் திருத்தப்பட்ட உறுப்புரை 05.09 இற்கமைய 31.01.2023க்கு முன்னர் உறுப்புரிமை பெற்றோரும் தமது உறுப்புரிமையைப் புதுப்பித்தோருமே இக்கூட்டத்தில் கலந்து கொள்ள உரித்துடையவராவர்.

பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டிய பிரேரணைகள் 13.04.2023 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
(C-6278)
திரு.லோ.துஷிகரன்
செயலாளர்

**காணி விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 66 பரப்புக் காணி (நிலப்பரப்பு) மட்டுவில் காபற் வீதியிலிருந்து இரண்டாவது காணி.

- 1 பரப்பின் விலை 150,000/=
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து 1½ km தூரம்.

(15124)

தொடர்பு


076 755 8606, 077 638 5683





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாபிள்களின் விலைகள் குறைப்பு



(கொழும்பு)

சந்தையில், மாபிள்களின் விலை, 12.5 முதல் 15 வீதத்திற்கு இடைப்பட்ட அளவில் குறைவடைந்துள்ளதாக, லங்கா டைல் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மஹேந்ர ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ரூபாவின் பெறுமதி அதிகரித்ததை அடுத்து, உள்ளூர் சந்தையில், அனைத்து மூலப் பொருட்களின் விலைகளும் குறைவடைந்து வருகின்றன.

அதேநேரம், மாபிள்களுக்கான கேள்வியும் சந்தையில் தற்போது வீழ்ச்சியடைந்து வருகின்றது.

இந்த நிலையில், கட்டாயமாக மாபிள்களின் விலைகளைக் குறைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக லங்கா டைல் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மஹேந்ர ஜயசேகர தெரிவித்துள்ளார். (4)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி





அமரர்.

## பொன்னையா பாலறஜித்(மதன்)

பிறப்பு—1980.11.20 இறப்பு—2019.04.02

தோள் மீது கைபோட்டபடி
உன் புகைப்படத்தை எடுத்துப்
பார்க்கிறேன்...
நீ மரணித்ததாய் வந்த செய்தியின்
பிற்பாடு அந்தக் கைகள் என்
நெஞ்சுக் கூட்டுக்குள் உட்புகுந்து
உன் அழகு முகத்தை ஆழமாக
வரைந்துள்ளது...
அணைப்பின் அழுத்தத்தில் மூச்சு
முட்டிய கணமும்
நெருக்கத்தின் பிரியமும்
இன்னமும் என் விழிகளில் தேங்கி
நிற்கிறது.
எங்கே அழுது விடுவேனோ
என்கிற அச்சம் எழுகிறது...
அழுது அழுது என் மனங்களில்
படிந்துள்ள உன் நினைவுகள்
கரைந்து விடுமோ எனும்
அச்சமே அது...
பிறப்பு எப்படி என்பதை நான்
பிறந்து உணர்ந்தவன்...
ஆனால் இறப்பு எப்படி என்பதை
உன் இழப்பில் தினமும்
உணர்கிறேன்...

கவிதை—
கிருபா(அத்தான்)

(15113)

கொக்குவில் மேற்கு, கொக்குவில் வாராகி கோவிலடி,
தகவல்—தாய் அன்னலட்சுமி மற்றும் மனைவி. பிள்ளைகள்.

# இராசிபலன்

02.04.2023
பங்குனி 19, ஞாயிற்றுக்கிழமை
துவாதசி முழுவதும்

மகம் முழுவதும்
சுபநேரம் -9.11-10.41 மணிவரை
இராகுகாலம்- 4.41-6.11மணிவரை

குருத்தோலை ஞாயிறு
சந்திராஷ்டமம் -
திருவோணம்.

வளவன்

**மேஷம்** அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாடு திருப்தி தரும் ,பிறர் உதவியுண்டு.

**கடகம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு,காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம்,குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்** குடும்பத்தினரிடையே எதிர்பாராத முரண்பாடுகள் தோன்றி மறையும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.

**ரிஷபம்** வழிபாடு காரிய வெற்றி தரும், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம்,பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்** நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள்,வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்** பயணங்களால் பலனுண்டு ,தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உற்சாகமான நாள், பணத்தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொதுக் காரியங்களில் ஆர்வம் கூடும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**கன்னி** அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், சயனசுக்க் குறைவுகள் ஏற்படலாம்.

**தனுசு** அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்,மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், வழிபாடு ஆனந்தம் தரும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மீனம்** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்,சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும்,கௌரவமான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பத்தைக் கண்டு இரங்குவது மனித இயல்பு அதை நீக்குவது தெய்வீகப் பண்பு.

# தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகளை கண்டித்து சங்கானையில் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**வடகிழக்கில் தமிழர்களின் இருப்பை அழிக்கும் திட்டமிட்ட செயற்பாடுகளைக் கண்டித்தும் அதைத் தடுத்து நிறுத்த வலியுறுத்தியும் மாபெரும் கண்டனப் போராட்டமொன்று நேற்று சங்கானையில் முன்னெடுக்கப்பட்டது.**



கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தலைமையில் யாழ்ப்பாணம் சங்கானைச் சந்தியில் காலை இப்போராட்டம் நடைபெற்றது.

இதன் போது வெடுக்குநாறி மலை எங்கள் சொத்து, கிண்ணியா எங்கள் சொத்து, நெடுந்தீவு எங்கள் சொத்து, கச்சதீவு எங்கள் சொத்து, அழிக்காதே அழிக்காதே தமிழினத்தை அழிக்காதே, தொல்லியல் திணைக்களமே வெளியேறு, வெளியேறு வெளியேறு படைகளே வெளியேறு, எங்கே எங்கே உறவுகள் எங்கே, தமிழர்களின் தீர்வு சுயாட்சியே, எடுப்பது பிச்சை அறுப்பது எங்களின் கழுத்தையா உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு கோசங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (4-33-104)



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலகமும் தீவகம் வடக்கு கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய அலை மொழி 6 நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் அனலைதீவு ஐயனார் ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெற்றது.

(படம்:-சிவசாந்தன்)

# நூற்றாண்டு விழாவும் நூல் வெளியீடும்

(கரணவாய்)

மகாஜனக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் கவிஞருமான செ.கதிரேசர்பிள்ளையின் நூற்றாண்டு நிகழ்வும் கதிரேசர் கவிதைகள் நூல் வெளியீடும் இன்று பிற்பகல் 3 மணிக்கு மகாஜனக் கல்லூரி பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் பாடசாலை அதிபர் ம.மணிசேகரன் தலைமையில் நடைபெறும். (4)

# கொடிகாமத்தில் விபத்து இருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கச்சாய் வீதியில் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கொடிகாமத்தில் இருந்து கச்சாய் நோக்கிப் பயணித்த துவிச்சக்கரவண்டியை அதே திசையில் பின்புறமாக வந்த மோட்டார்சைக்கிள் மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

இதில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த முதியவர் மற்றும் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் இளைஞன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (4-30)

# இந்துக்களை அழித்து விட்டால் தமிழர்களை அழிக்கலாம் என பேரினவாதம் கங்கணம் கட்டுகிறது

## வாசுதேவக் குருக்கள் தெரிவிப்பு

(அராலி)

இலங்கையில் இந்து சமயத்தை அழித்தால் தமிழர்களை அழித்து விடலாம் என பேரினவாத சக்திகள் கங்கணம் கட்டுவதாக வீணாகான குருபீடத்தின் பீடாதிபதி சபா வாசுதேவக் குருக்கள் தெரிவித்தார்.

நேற்று சனிக்கிழமை சங்கானையில் இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தெரிவிக்கையில், இலங்கையில் தமிழ் மக்களை மீண்டும் ஒடுக்குவதற்கு சில தீய சக்திகள் ஒன்று கூடியுள்ள நிலையில் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து அவற்றை முறியடிக்க வேண்டும்.

இலங்கையில் தமிழ் மக்களை ஒடுக்குவதற்கு இந்த சமயத்தை அழிக்க தொல்லியல் திணைக்களம் என்ற போர்வையில் தீய சக்திகள், செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

வவுனியா நெடுங்கேணியில் அமைந்துள்ள வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயம் அழிக்கப்பட்டமை சமயத்தை மட்டுமல்ல தமிழினத்தின் அடையாளத்தையும் இல்லாது ஒழிக்கும் செயற்பாடாகவே பார்க்கிறோம்.

அதன் தொடர்ச்சியாக குருந்தூர் மலை விவகாரமும் இந்து சமயத்தை ஒழிப்பதன் மூலம் தமிழர்களின் வரலாற்றை அத்தேசத்திலிருந்து இல்லாது ஒழிக்கும் செயற்பாடுகள் முழு வீச்சில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆகவே தமிழினம் அன்று தொட்டு இன்று வரை போராடிக் கொண்டிருக்கும் இனமாக இருக்கின்ற நிலையில் எமது இனத்தையும் சமயத்தையும் பாதுகாப்பதற்குப் போராட்டங்களை விரிவுபடுத்த வேண்டிய தேவை அனைவருக்கும் உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (4-104)

# இலவச உரம்

(யாழ்ப்பாணம்)

கைதடி கமநலசேவை நிலைய எல்லைக்குட்பட்ட நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்பைச் சேர்ந்த நெற்செய்கையாளர்களுக்கு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கைதடி கமநலசேவை நிலையத்தில் வைத்து இலவச ரி.எஸ்.பி உரம் வழங்கி வைக்கப்படவுள்ளது.

ஒரு பரப்பிற்கு 400 கிராம், என்ற அடிப்படையில் கடந்த வருடம் நெற்பயிர்ச்செய்கை மேற்கொண்ட விவசாயிகளுக்கு மேற்படி உரம் வழங்கி வைக்கப்படவுள்ளது.

தகுதியுடைய நாவற்குழி கிழக்கு விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் வருகை தந்து இலவச உரத்தினை பெற்றுக் கொள்ளுமாறு கமக்கார அமைப்பினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (4-30)

# மாணவர்கள் பாடசாலைக்கு வராவிடின் பெற்றோர்களுக்கு உடன் தெரிவியுங்கள்

## தெல்லிப்பழை பிரதேச செயலாளர்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைக்குச் செல்வதாக தமது பெற்றோரிடம் கூறி விட்டு வெளி இடங்களுக்கு சில மாணவர்கள் செல்வதாக பரவலாக குற்றச்சாட்டுக்கள் உள்ளதால், ஒரு மாணவன் அல்லது மாணவி அன்றைய தினம் பாடசாலைக்கு வருகை தரவில்லையாயின் அத்தகவலினை அவர்களது பெற்றோருக்கு உடனடியாக தெரியப்படுத்தல் வேண்டும் என தெல்லிப்பழை பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமது பிள்ளைகள் பற்றிய சரியான தகவல்களை அவர்களது பெற்றோர்கள் அறிந்து கொள்வதன் ஊடாக மாணவர்களை தவறான வழி செல்வதனை தடுக்க இது ஒரு முயற்சியாக அமையும்.

ஆசிரியர்களுக்கு மட்டுமன்றி பெற்றோருக்கும் தமது பிள்ளைகளின் நடத்தை தொடர்பில் அதிக கடமையும் பொறுப்பும் உள்ளதால், சகல பெற்றோர்களும் மிகவும் அவதானத்துடனும் பொறுப்புடனும் பாடசாலை செல்லும் தமது பிள்ளைகள் குறித்து மிகுந்த கவனம் எடுக்க வேண்டும்.

நாளாந்தம் சமூகத்தில் நடைபெறும் சம்பவங்கள் ஒழுக்கம் மிக்க எமது சமூகத்தின் நற்பெயருக்கு களங்கத்தினை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

தமது கற்றலின் ஊடாக தமது சிறந்த எதிர்காலத்தினை கட்டி வளர்க்க வேண்டிய பருவத்தில் உள்ள மாணவர்கள் போலியான பல நபர்களின் தொடர்புகளைப் பெற்றுத் தவறான வழியில் சென்று தமது பெறுமதியான வாழ்வினை தொலைத்து நிற்கும் சம்பவங்கள் தொடர்ச்சியாக எமது சமூகத்தில் நடைபெற்று வருகின்றன.

கல்வி என்பது ஒரு மனிதனின் மிக முக்கியமான மூலதனமாகும். அதிலும் அடிப்படை கல்வி என்பது மிக மிக அவசியமான ஒன்றாகும்.

இந்த வாழ்வியல் உண்மைகளை சரிவர உணராமல் வெறும் கலாசார பிறழ்வு மாற்றங்களுக்கு அடிமையாகி தமது பெறுமதியான வாழ்வை தொலைத்து நிற்பதால் மாணவர்களது எதிர்காலம் மிக மோசமாக பாதிப்பதால், இந்தச் சமூகத்தின் பொறுப்புள்ளவர்கள் என்ற அடிப்படையில் நாம் அனைவரும் நம் எதிர்காலச் சந்ததியின் நன்மைக்காக அதிகம் பாடுபட வேண்டியுள்ளது என மேலும் தெரிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 391
Viber 076 636 3378



# மாற்றப்படும் தமிழர் வரலாறு

**தமிழரின் பூர்வீகச் சொத்தான வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயம் இடித்தழிப்புச் செய்யப்பட்ட விடயம் இன அழிப்பின் அடையாளமே! தமிழரின் பூர்வீகங்களை பறிக்கும் செயலை யார் செய்தாலும் அதை ஏற்றுக் கொள்ள முடியாது!**

• அபிமன்யு

இம்சை அரசன் 23 ஆம் புலிக்கேசி திரைபபடத்தில் ஒரு காட்சி.திரைப்படத்தின் கதாநாயகன் வடிவேலு தனது உடலை மறைத்தபடி முகம் தெரிய நிற்பார்.அருகில் வாட்ட சாட்டமான உடல்கட்டு கொண்ட ஒருவர் தனது தலையை மறைத்தபடி உடல் தெரிய நிற்பார்.

இதைக்கண்ணுற்ற அமைச்சர் வடிவேலுவிடம் வந்து என்ன ஏது என்று விசாரிப்பார்.

அதற்கு வடிவேலு கூறுவார், " அமைச்சரே எனது படத்தை வரைந்து வைத்தால் அது அவ்வளவு நன்றாக இருக்காது. ஆகையால் அந்த கட்டழகனின் உடலுடன் எனது தலையை இணைத்து இந்த 23 ஆம் புலிக்கேசியை ஒரு மாவீரன் போல் வரைய வைத்துள்ளேன்.

நூறுவருடங்களின் பின் வரப்போகும் மடையர்களுக்கு இந்தப் புலிக்கேசி எப்படி இருந்தான் என்பது தெரியவா போகிறது. ஆதலால் தான் என்னை ஒரு மாவீரன் போல் சித்தரித்திருக்கிறேன்.வரலாறு முக்கியம் அமைச்சரே " என்று கூறுவார்.இது வெறும் நகைச்சுவை அல்ல. இதில் பல அர்த்தங்கள் பொதிந்திருக்கின்றன.

ஆம், தமிழர் பூர்வீக நிலங்களை அபகரித்து அதன் வரலாறுகளை மாற்றி எழுதும் கொடும் செயல் மிகத் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தற்போதைய பேரினவாதத்தின் வரலாற்றை திரிவுபடுத்தும் செயல்களைப் பார்க்கும் போது 23 ஆம் புலிக்கேசியின் சிந்தனையே மேலோங்கி நிற்கிறது.

தமிழர்களின் பூர்வீகங்களை அழித்து அதை பௌத்த சின்னங்களாக காட்டுவதனூடே இந்த நாடு பௌத்த நாடு என்பதை எதிர்காலச் சந்ததிக்கு கடத்த முற்படும் செயல் எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாதது.

தமிழர்களின் பூர்வீகங்களை திரிவுக்குட்படுத்தும் அரச இயந்திரங்களின் நிகழ்ச்சி நிரலினூடான செயற்பாடுகளில் வவுனியா, வெடுக்குநாறி ஆதிசிவன் கோவில் சிவலிங்கம் உள்ளிட்ட விக்கிரகங்களை உடைத்தெறிந்த கொடும் செயல் மிகக் கொடும் செயல். இதை எவர் செய்தாலும் அது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றல்ல.

ஏலவே குருந்தூர்மலை தமிழர்களிடத்திலிருந்து பறித்தெடுக்கப்பட்ட நிலையில் தற்போது வெடுக்குநாறி ஆதிசிவன் கோவில் இடித்தழிக்கப்பட்ட விடயம் நடந்தேறியிருக்கிறது. மதம் என்பது மனித மார்க்கத்திற்குரியதே அன்றி அதனூடே இரத்த ஆறு ஓடியதான வரலாறு இல்லை. அவ்வாறு நடக்குமாக இருந்தால் அதற்குப் பெயர் மதமும் இல்லை.

அனைத்து மதங்களும் அன்பையே போதிக்கின்றன. ஆனால் மத நிந்தனையினூடே




இனங்களுக்கிடையில் பூசலை ஏற்படுத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலய உடைப்பிற்குப் பின் கூகுள் வரைபடத்தில் வவுனியா வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தை குறிக்கும் இடத்தில் பௌத்த விகாரையை காட்டுவது போல மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இதிலிருந்து குறித்த கொடும் செயலை யார் செய்திருப்பார் என்பது புலனாகிறது.வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலய தகர்ப்பு தொடர்பில் விசாரணைகளை செய்து உடன் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி கட்டளையிட்டிருக்கும் நிலையில் கடந்த வியாழக்கிழமை ஆதிசிவன் ஆலய அழிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து வவுனியாவில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

ஆலய நிர்வாகத்தினரால் ஒழுங்குபடுத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பொது மக்கள், அரசியல்வாதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். குறித்த ஆர்ப்பாட்டம் வவுனியா மாவட்டச் செயலகம் வரை சென்று அங்கு வவுனியா அரச அதிபருக்கும் ஜனாதிபதியின் செயலருக்கும் மகஜர் கையளிக்கப்பட்டதுடன் நிறைவுற்றது.

இந்த நாடு ஒரு இனத்துக்கு மாத்திரம் சொந்தமானதல்ல. தமிழினமும் பூர்வீகமாக வாழ்ந்த பூமியிது. இந்தப் பூமியை ஒரு இனத்துக்கோ, மதத்துக்கோ உரித்துடையதாய் காட்ட முற்படுவது எவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதான ஒன்றல்ல.

போருக்கு பின்னர் தமிழர் பூர்வீக நிலங்கள் கொஞ்சம் கொஞ்சமாக பறிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.இது தொடர்பில் சர்வதேசம் உட்பட எவரும் கரிசனை கொள்ளவில்லை என்பது தான் வேதனை.

கொடும் போரால் சொல்லெனா துன்பங்களை அனுபவித்து மீள முடியாத வடுக்களை நெஞ்சில் சுமந்து கொண்டு வாழும் தமிழினத்தின் மீது மீண்டும் மீண்டும் பேரினவாத சக்திகள் இவ்வாறான செயல்களைச் செய்வது மீண்டும் இனங்களுக்கிடையிலான முரண்பாட்டை தோற்றுவிக்கும்.

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய அமைவிடத்தை, கூகுள் பௌத்த விகாரையாய் காட்டுவது தொடர்பான பதிவொன்றை முகப்புத்தகத்தில் பார்த்திருந்தேன். அப்பதிவில்,

" இரண்டு நாட்களுக்கு முன்பு google maps இல் பதிவு செய்யப்படிருந்த வெடுக்குநாறி மலை விகாரையின் பதிவு தவறானது என முறைப்பாடு செய்திருந்தேன்.இன்று google maps இல் இருந்த என்னுடைய பதிவுகள் அனைத்தும் (13 வருட பதிவுகள்) நீக்கப்பட்டு அவை guidelines இற்கு உட்பட்டு இல்லை என்ற மின்னஞ்சலை அனுப்பியுள்ளார்கள்.

இது இரண்டும் தொடர்புள்ளனவா? வேறு யாருக்கும் இவ்வாறான அனுபவம் உண்டா? தொடர்பிருப்பின் கூகுள் இலங்கைப் .பதிவுகளை நிர்வகிக்கும் உரிமை யாரிடம் கொடுக்கப்பட்டுள்ளது? சரியான தகவல்கள் நீக்கப்படுவது தொடர்பில் கூகுளுக்கு கரிசனை இல்லையா?என்றவாறு அப் பதிவு இருந்தது.

உலகளவில் சரியான பதிவுகளை இடும் கூகுள் போன்ற நிறுவனங்களையே பொய்க்கும் அளவிலான செயற்பாட்டிற்கு அந் நிறுவனம் கண்மூடி இருப்பதற்குள் இருக்கும் புற நடையினையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த நாடு சிங்கள பௌத்த நாடு. இங்கு நாம் வைத்தது தான் சட்டம் என்ற மமதைப் பேச்சும் போக்குமே இந்த நாட்டில் பல தசாப்தங்களாக இரத்த ஆறு ஓடக் காரணமாகியது.

போர் நிறைவுற்ற பின்னரேனும் தமிழினத்தை அவர்களின் பூர்வீகங்களுடன் நிம்மதியாக வாழவிட வேண்டும் என்ற எண்ணம் கொஞ்சமும் இன்றி மதங்களினூடே பிரச்சினைகளை ஏற்படுத்துவதினூடாக எதைச் சாதித்துவிடப் போகின்றார்கள்?


இந்த நாட்டில் தமிழினத்துக்கும் உரித்துண்டு. இந்த தேசம் தமிழினம் பூர்வீகமாக வாழ்ந்த தேசம்.இதை முதலில் புரிய வேண்டியவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அதைவிடுத்து தமிழர் பூர்வீக நிலங்களைப் பறித்து அதன் வரலாற்றை மாற்றி அமைப்பதென்பது 23 ஆம் புலிக்கேசி மன்னன் தன் தலைக்கு இன்னொருவரின் உடலை இணைத்து வரைந்த ஓவியத்துக்கு சமமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

## ஒரு சிலரின் சுயநலத்தால் உடைக்கப்பட்ட இந்துபோட்



வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் சாத்திரியார் சதாசிவத்தைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

என்ன இன்னமும் சாத்திரியாரைக் காணவில்லை. என்ன சங்கதியோ, மூப்பர் விசாரித்தார்.

கடந்த 29 ஆம் திகதி சனி மாற்றம் நடந்ததல்லோ. அதற்குப் பரிகாரப்பூசை செய்ய கோவிலுக்குப் போயிருப்பார்.

இவ்வாறு கங்காணி சொல்லி முடிப்பதற்குள் சாத்திரியார் சதாசிவம் ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

இந்தா சாத்திரியார் வந்துட்டார். சிறாப்பர் கனகசபை சொல்ல, என்ன சாத்திரியார் எப்பவும் நேரத்தோட வாற நீங்கள் இண்டைக்குப் பிந்திப் போனியள். என்ன சங்கதி. விதானையார் விஸ்வலிங்கம் விசாரித்தார்.

**சாத்திரியார்:-** அதை ஏன் கேக்கிறியள். திருநெல்வேலியில இருக்கிற எங்கட சைவ வித்தியாபிவிருத்திச் சங்கத்தின்ர தலைமை அலுவலகத்தை ஆண்கள் விடுதியில இருக்கிற சில மாணவர்கள் தாக்கிப் போட்டினம். அதுதான் ஓடிப்போனனான்.

**பண்டிதர்:-** சாத்திரியார் இந்து போட்டின்ர தலைமை அலுவலகம் ஏன் தாக்கப்பட்டது.

**சாத்திரியார்:-** ஆண்கள் விடுதிக்குப் பொறுப்பாக இருந்த முகாமையாளர் ஒருவர் மீது இந்து போட் தலைமை ஒரு சில குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அவரை இடைநிறுத்துவதற்கு அனுமதி வழங்குமாறு சிறுவர் நீதிமன்றைக் கேட்டிருந்தது. அதற்குச் சிறுவர் நீதிமன்றமும் அனுமதி வழங்க, முகாமையாளர் வெளியேற்றப்பட்டார்.

அவர் வெளியேறியதும் அந்த விடுதியில இருந்த சில மாணவர்கள் இந்து போட் தலைமை அலுவலகத்தைத் தாக்கி சேதப்படுத்தியிருக்கினம். இப்ப சம்பந்தப்பட்ட மாணவர்களைச் சிறுவர் நீதிமன்றம் மக்கோனாவுக்கு அனுப்பியிருக்குது.

**விதானையார்:-** அப்ப சாத்திரியார், மக்கோனாவுக்கு அனுப்பப்பட்ட மாணவர்கள் ஏற்கனவே சைவச் சிறுவர் இல்லத்தின்ர ஆண்கள் விடுதியில சேர்ந்து படிச்சவியள் தானே.

**சாத்திரியார்:-** அது தான் இல்லை. இந்த மாணவர்கள் நீதிமன்றத்தால சைவச் சிறுவர் இல்லங்களில சேர்க்கப்பட்டவர்கள்.

அதாவது சில பல குற்றச்செயல்களுடன் சம்பந்தப்பட்ட சிறுவர்களை அவர்களின்ர நன்மை கருதி, சீர்திருத்தப்பள்ளிக்கு அனுப்பாமல் சைவச் சிறுவர் இல்லத்தில அனுமதிக்கிற செயற்பாடு இருக்குது.

அப்படி வந்த மாணவர்கள் தான் இந்து போட்டின்ர தலைமை அலுவலகத்தை உடைச்சவியளாம்.

**பண்டிதர்:-** கடவுளே! எங்கட சுய நலத்துக்காக அந்த மாணவர்களைத் தூண்டி விட, இப்ப அந்தப் பிள்ளைகள் சீர்திருத்தப்பள்ளியில இருக்க வேண்டியதாய்ப் போச்சுது.

**வாத்தியார்:-** தூண்டி விடுகிறதுக்கும் நிர்வாகங்களைக் குழப்புறதுக்கும் எங்களிட்டத் தாராளமாக ஆட்கள் இருக்கினம் என்பது தெரிந்த விடயம்.

இருந்தாலும் குற்றச் செயல் இழைத்ததாக இனங்காணப்படும் சிறுவர்களைச் சைவச் சிறுவர் இல்லங்களில சேர்த்தால், அது நிச்சயம் அங்க இருக்கிற அப்பாவிப்பிள்ளைகளையும் பாதிக்கும் என்பதால, அத்தகைய சிறுவர்களுக்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்ய வேணும்.

இவ்வாறு வாத்தியார் கூறியதும் அதனை ஆலடியில் இருந்த அனைவரும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். இதன்போது, இடையில் குறுக்கிட்ட சாத்திரியார் சதாசிவம்; இது விடயத்தில சிறுவர் நன்னடத்தைப் பிரிவுகள் பக்கசார்பற்று உள்ளதை உள்ளபடி அறிக்கையிட வேணும்.

எங்கட சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடுத்தால் அதால ஏற்படுகிற பாதிப்பு ஈடுசெய்ய முடியாததாக இருக்கும்.

**விதானையார்:-** சாத்திரியார் சொல்லுறபடி சிறுவர் நன்னடத்தைப் பிரிவினர் நடுநிலை நின்று தங்கட கடமையைச் செய்யாவிட்டால், அது பெரும் பாவச் செயலாகும்.

அதே மாதிரி இந்து போட் அமைப்புக்கள் தாங்கள் நியமிக்கிற உத்தியோகத்தர்கள் பொருத்தமற்றவர்கள், பிள்ளைகளை முறையாகப் பராமரிக்கவில்லை என்று நெஞ்சத்துக் கோடாமையின் பால் நின்று கண்டறிந்தால், அத்தகைய உத்தியோகத்தர்களை உடனடியாகப் பதவியிலிருந்து நீக்கிறதான ஏற்பாடுகள் இருக்க வேணும்.

இதை விட்டிட்டு ஒரு உத்தியோகத்தரை நியமிக்கிறது. அவர் பொருத்த மற்றவர் எண்டால், அவரைப் பதவியிலிருந்து விலக்க முடியாமல் தத்தளிக்கிறது, நீதிமன்றத்தை நாடுகிறது. சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் அங்கிருந்து வெளியேற மாட்டேன் எண்டு அடம் பிடிக்கிறதெல்லாம் இந்துபோட்டின்ர பலவீனம் எண்டு தான் சொல்லுவன்.

**கங்காணி:-** அதெண்டால் உண்மைதான்.

இந்தாப்பாருங்க கிறிஸ்தவ அமைப்புகளும் இப்படியான சிறுவர் இல்லங்களை நடத்துகினம். ஆனால் அங்க நடக்கிற எந்தச் சங்கதியும் வெளியால வாறதில்லை.

ஒரு உத்தியோகத்தரை நியமிக்கிறது, விலத்திறது எல்லாம் நாலாம் பேருக்கும் தெரியாமல் நடந்தாகிறது.

அங்க நன்னடத்தை உத்தியோகத்தர்களின்ர தலையீடு இல்லாத ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்குது. இது பற்றியும் சைவச் சிறுவர் இல்லங்கள் சிந்திக்க வேணும்.

இவ்வாறு விதானையார் விசுவலிங்கம் கூறியதும் ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.

**வாத்தியார்:-** இப்ப எல்லாம் அலமலக்கான நிர்வாகம் தான் நடக்குது. யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில இருந்த நாவலர் பொருமானின்ர உருவப்படத்தைத் தூக்கி கீழ எறிஞ்ச சம்பவம் தான் இப்ப பேசுபடு பொருளாகி இருக்குது.

இவ்வாறு வாத்தியார் கூற, இடையில் குறுக்கிட்ட கங்காணி கார்த்திகேயன் நேற்று முன்தினம் இரவு நாவலற்ற அந்த உருவப்படம் மீளவும் உரிய இடத்தில பொருத்தப்பட்டிருக்கிறதாகக் கேள்வி.

**சிறாப்பர்:-** அட சங்கதி அப்படியோ. நல்லதாய்ப் போச்சுது என்று சிறாப்பர் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டா மணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தமிழரை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்றார் தந்தை செல்வா. போகிற போக்கைப்பார்த்தால் கடவுளையே காப்பாற்ற முடியாது போல?**

**மதுவன் — மீசாலை**

**நரிக்கூட்டத்துடன் காகக்கூட்டம் சேர்ந்தால் எப்படி இருக்கும்?**

நரிகளுக்கு உழைத்து உண்ணத் தெரியாது. மற்றைய விலங்குகள் வேட்டையாடி உண்ட எச்சங்களை உண்டு உயிர் வாழ்பவை. அவைகளிடத்தே கொள்கை என்று எதுவும் இருக்காது. வயிற்றை நிரப்புவதற்கு வழி கிடைத்தால் சரி. அந்தப்பக்கமும் நிற்கும். இந்தப்பக்கமும் நிற்கும்.
ஆனால் காகங்கள் அப்படி இல்லை. அவற்றிடம் ஒற்றுமை மிகுதியாக உண்டு. உழைத்து, ஒன்று கூடி உண்ணும் குணம் படைத்தவை. எனவே இவை இரண்டும் ஒருநாளும் ஒன்று படாது என்பதே முடிவானது.

**டிலைக்ஷன் — நவாலி**

**மானிப்பாய் மருதடி விநாயகர் சிறப்பு பற்றி கூறமுடியுமா?**

மானிப்பாய் மருதடி விநாயகர் மருத மரங்கள் நிறைந்த சூழலில் இருந்து அருள் புரிவதால் மருதடி விநாயகர் என்று சிறப்பிக்கப்படுகிறார்.
மருதடி விநாயகருக்கு சித்திரைப் புத்தாண்டு அன்று தேர் உற்சவம் காண்பதே மிகச் சிறப்பு வாய்ந்தது. நாம் சிறு வயதில் சித்திரைப் புத்தாண்டை மருதடி விநாயகர் இரதோற்சவத்திலேயே கொண்டாடுவோம்.
வயல் நிறைந்த கோவில் வீதிகளில் கச்சான் கடை, ஐஸ்கிறீம் கடை, மணிக்கடை எனக் குவிந்து நிற்கும் சனக் கூட்டத்துக்குள் நாம் ஓடிப் பிடித்து விளையாடிய காலங்கள் பசுமரத்து ஆணியாய் இன்றும் நிழலாடுகின்றன.
என்ன செய்வது காலம் அனைத்தையும் மாற்றியமைத்து விட்டதே.
புதுமை பழமையை விழுங்கி விட்டது.

**சுதன் — குப்பிழான்**

**தமிழரை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்றார் தந்தை செல்வா. போகிற போக்கைப்பார்த்தால் கடவுளையே காப்பாற்ற முடியாது போல?**

குருந்தூர் சிவன் புத்த பெருமான் அமர்ந்த இடம் ஆகிவிட்டது. வெடுக்குநாறி மலை ஆதிசிவன் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டு விட அந்த இடம் பௌத்த விகாரைக்குரியது என கூகுல் வரைபடத்தில் பதிவேற்றப்பட்டு விட்டது.
இப்படி எத்தனை எத்தனை கொடுமைகள், ஆக்கிரமிப்புக்கள், அடாத்துக்கள்.
இவை அனைத்தையும் எதிர்க்க எம்மிடம் பலம் இல்லை.
நாம் தான் சுயநல அரசியலுக்காக பிரிந்து நிற்கிறோமோ.




**அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**

**076 097 3126**

**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**விக்னேஸ்வரி — யாழ்ப்பாணம்**


**அம்மா-மகள் உறவைப் பிரிப்பது யார் வியாசரே?**

தாய்-மகள் உறவு என்பது மிகவும் பிணைப்பு மிகுந்தது. அந்த உறவுக்கு பிரிவு ஏற்படுவதற்கு வாய்ப்பே இல்லை. தனது மகள் பற்றிய விடயங்கள் அனைத்தையும் அறியக்கூடியவள் தாய். ஏனெனில் அந்தத் தாய் என்றோ ஒருநாள் மகளாக இருந்திருப்பாள்.
பெண்மையின் உறவுகளில் தாய்-மகள் உறவின் பலம் மிக மிக அதிகம். அந்த உறவு அவ்வளவு சுலபத்தில் வெட்டி விடப்படாது. ஆனாலும் மாமி-மருமகள் உறவு அப்படி இல்லை.

**திகான் — வடமராட்சி**

**துரோகம் விவேகத்தின் ஆற்றலா வில்வித்தை வியாசரே?**

விவேகம் என்பது ஒரு வீரனை எப்படி வெற்றி கொள்வது என்பதை திட்டம் தீட்டி அவனுடன் போரிட்டு அவனை வெற்றி கொள்வது.
துரோகம் அவ்வாறில்லை. வீரனுடன் இருந்து அவனுக்கு குழிபறித்து அவனின் முதுகில் குத்தி அவனை வீழ்த்துவது. அதனால் துரோகம் விவேகத்துடன் ஒரு நாளும் சேர்ந்திடாது.
விவேகமுடையவன் வீரனாகவும் நேர்மையுடையவனாகவும் இருப்பான். துரோக மனம் கொண்டவன் கோழையாகவும் நேர்மை தவறியும நடக்க வல்லவன்.



**இனப்பிரச்சினையை தீர்த்து வைப் பேன் என்கிறாரே ஜனாதிபதி?**

**விஜயரட்ணம் — யாழ்ப்பாணம்**

**தமிழரின் நல்லெண்ணத்துடன் கட்டப்பட்ட யாழ்.நாகவிகாரை நூறு வருடங்களை நெருங்குகின்றது. தற்போது கட்டப்படும் விகாரைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

அன்று கட்டப்பட்ட அந்த நாக விகாரை நல்லிணக்கத்தின் அடையாளமாக இருந்தாலும் இன்று நல்லிணக்கத்தை குழிதோன்றிப் புதைத்து விட்டு கண்ட இடமெல்லாம் பௌத்த விகாரை அமைக்கும் செயல் நடந்துகொண்டிருப்பது வேதனைக்குரியது.
மதம் மனிதனை மனிதனாக வாழ வைக்கவே தவிர அவனை வன்முறையை தூண்டுபவனாக மாற்றுவதற்கானது அல்ல. ஆனால் இன்று தமிழர் பூர்வீகங்களை அழித்து அந்த வரலாறுகளை மாற்ற முனைவது ஒரு நாளும் நல்லெண்ணத்தை தராது.

**சுந்தரம் — துன்னாலை**

**குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டினால் அழகு கெட்டுவிடும் என எண்ணும் தாய்மார் பற்றி?**

தாய்மை என்பது எவ்வளவு புனிதமானது என்பதை தாய்மை அடைந்தால் மாத்திரமே உணர்ந்து கொள்ளலாம்.
நீங்கள் கூறும் இந்த விடயங்கள் கஞ்சியில் பயறு இருப்பதைப் போன்றது.
ஒரு சிலர் அவ்வாறு நினைத்திருந்தாலும் தாய்மை என்கிற தியாகிகளை நாம் கோவில் கட்டி கும்பிட வேண்டும்.
அழகு என்பது உடல் சார்ந்தது இல்லை. அது மனம் சார்ந்தது. தாய்மைக்கு அழகு பாலுட்டல் தான்.
கஞ்சியில் இருக்கும் ஒரு சில பயறுகளுக்காக ஒட்டுமொத்த தாய்மார்களையும் கஷ்டப்படுத்திவிடக் கூடாது.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**இனப்பிரச்சினையை தீர்த்து வைப் பேன் என்கிறாரே ஜனாதிபதி?**

ஒவ்வொருவர் ஆட்சிக்கு வரும் போதும் இனப்பிரச்சினைக்கு நான் தீர்வு காண்பேன் என வாக்குறுதி வழங்குவதும் தேர்தலில் தோற்று எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு அரசாங்கங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடுவதும் இலங்கை அரசியலின் சாபக்கேடு.
தமிழினத்துக்கான தீர்வை வழங்கக்கூடிய இதய சுத்தியுடன் செயற்படும் தலைவர்களை இன்னும் நாம் அடையாளம் காணவில்லை என்பது தான் வரலாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : தேடி வந்த மாப்பிள்ளை
பாடியவர் : எஸ்.பி.பாலசுப்ரமணியம்
இசை : எம்.எஸ். விஸ்வநாதன்



வெற்றி மீது வெற்றி வந்து என்னை சேரும்
அதை வாங்கி தந்த பெருமை எல்லாம் உன்னை சேரும்
வெற்றி மீது வெற்றி வந்து என்னை சேரும்
அதை வாங்கி தந்த பெருமை எல்லாம் உன்னை சேரும்

பெற்றெடுத்து பேர் கொடுத்த அன்னை அல்லவோ
நீ பேசுகின்ற தெய்வம் என்பது உண்மை அல்லவோ
பெற்றெடுத்து பேர் கொடுத்த அன்னை அல்லவோ
நீ பேசுகின்ற தெய்வம் என்பது உண்மை அல்லவோ

வெற்றி மீது வெற்றி வந்து என்னை சேரும்
அதை வாங்கி தந்த பெருமை எல்லாம் உன்னை சேரும்

தாய்பாலில் வீரம் கண்டேன்
தாலாட்டில் தமிழை கண்டேன்
தாய்பாலில் வீரம் கண்டேன்
தாலாட்டில் தமிழை கண்டேன்

உண்ணாமல் இருக்க கண்டேன்
உறங்காமல் விழிக்க கண்டேன்
உண்ணாமல் இருக்க கண்டேன்
உறங்காமல் விழிக்க கண்டேன்

மற்றவர்க்கு வாழுகின்ற உள்ளம் என்னவோ
அது உன்னிடத்தில் நான் அறிந்த பாடம் அல்லவோ

வெற்றி மீது வெற்றி வந்து என்னை சேரும்
அதை வாங்கி தந்த பெருமை எல்லாம் உன்னை சேரும்

அன்னை சிந்தும் கண்ணீர் எல்லாம்
பிள்ளையினால் பன்னீர் ஆகும்
அன்னை சிந்தும் கண்ணீர் எல்லாம்
பிள்ளையினால் பன்னீர் ஆகும்

ஆசை தரும் கனவுகள் எல்லாம்
அவனால் தான் நனவுகள் ஆகும்
ஆசை தரும் கனவுகள் எல்லாம்
அவனால் தான் நனவுகள் ஆகும்

அன்று தொட்டு நீ நினைத்த எண்ணம் என்னம்மா
அதை இன்று தொட்டு நான் முடிக்கும் வண்ணம் பாரம்மா

வெற்றி மீது வெற்றி வந்து என்னை சேரும்
அதை வாங்கி தந்த பெருமை எல்லாம் உன்னை சேரும்

# பொருளாதார நிலையை மீட்டெடுக்க நாம் என்ன செய்ய வேண்டும்?

பண்டைய காலத்தில் அறிவுப் புலமை சார்ந்த சில அறிஞர்களின் அறிவில் தங்கித்தான் பல சக்கரவர்த்திகள் தங்கள் இராஜ்யங்களை ஆண்டு வந்தார்கள் என்பதற்கு பல எடுத்துக் காட்டுகள் வரலாறாக பதிவாகியுள்ளன.

"மண்திணி ஞாலத்து உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற பாடல் சங்ககால புறநானூற்றுப் புலவரது அறம் சார்ந்த கூற்றாகும். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த அறிவு சார்ந்த புலவர் தன் மன்னனுக்கு கூறிய நீண்ட ஆலோசனைகளில் உயிர்ப்பான கூற்று இதுவாகும்.

"மன்னா நீ மூவுலகுக்கும் அரசனாக வர விரும்புகிறாயா..?" அப்போ நீ செய்ய வேண்டியது யாதெனில் "நிலனெளி மருங்கில் நீர் நிலை பெருகச் செய்" என்று அறிவுரை கூறுகின்றார் சங்க காலப் புலவர்.

அதாவது இரு மலை இடுக்குகளுக்கு இடையே ஒரு அணை கட்டி நீர் நிலைகளை பெருகச்செய்தாயானால் உணவுப் பயிர் எங்கும் செழித்து விளையும். மக்கள் பஞ்சம், பட்டினி உணவுப்பசியால் வாடாது வளம் பெற வாழ்ந்தால் நீ மூவுலகிற்கும் மன்னாதி மன்னன் ஆகலாம். இதுவே சங்ககாலப் புலவரது அறம் தாங்கிய கூற்றாகும்.

உணவு என்றால் என்ன தெரியுமா..? நிலத்தையும் நீரையும் தேவைக்கு அதிகமாக சேர்த்து வைத்தல் என்று பொருளாகும். அப்படி சேர்த்து வைத்தால் உணவுப் பயிரானது நாடெங்கும் செழித்து வளரும். அவ்வாறு செய்யும் மன்னர்கள் உலகிற்கு உடம்பையும் உயிரையும் படைத்த தத்துவ ஞானிகள் ஆகின்றார்கள்.

இத்தகைய அறிவுடையோரது அறம் தாங்கிய ஆலோசனைக்கு செவி சாய்த்து பண்டைய கால மன்னர்கள் வாழ்ந்தமையால் பல நாடுகள் நீர்,நிலம்,உணவில் குன்றா வளம் பொருந்தி சிறப்படைந்திருந்தன.

எமது தொப்புள்கொடி உறவான தமிழ்நாட்டில் நீர் வளம் குன்றிய காலத்து ஈழத்திலிருந்து உணவு இறக்குமதி செய்யப்பட்டதாக சிலப்பதிகாரம் கூறி நிற்கின்றது. நீர் வளம் நிறைந்த ஈழம்,பொருளாதாரச் சரிவினால் இன்று உணவிற்காக உலகத்திடம் கையேந்தி நிற்கிறது.

எந்த நாட்டில் வறுமை ஓங்கி பசியும் பட்டினியும் நிலவுமோ அந்த நாட்டில் மக்கள் புரட்சி ஏற்படும் என்றான் கிரேக்க அறிஞன் வீர அலெக்ஸ்சாண்டரின் குரு அரிஸ்டோட்டில். இதை அவன் மூவாயிரம் வருடங்களுக்கு முன்னரே கூறி வைத்தான். அவன் கூறியவாறுதான் ரஷ்யாவிலும் பிரான்ஸிலும் சீனாவிலும் பல் புரட்சிகள் உருவாயின.

புறநானூற்றுப் புலவரது உயிர்ப்பான கூற்றுக்கு அமையவே அமெரிக்கா மிதமிஞ்சி விளைந்த கோதுமையைக் கடலிலே கொட்டாமல் வறிய



நாடுகளின் பசிக்கு உதவி என்ற பெயரில் வழங்கி அங்கு புரட்சியோ மற்றும் கிளர்ச்சியோ ஏற்படாமல் தடுத்ததோடு அந்த நாடுகளில் தனது பூகோள வல்லரசு என்ற செல்வாக்கை நிலை நிறுத்தியது.

சங்ககாலப் தமிழ்ப் புலவரது கூற்றுக்கமைய முழு உலகுக்கும் சமகாலத்தில் அமெரிக்கா பூகோள மன்னனாக வரும் நிலைமையை ஏற்படுத்தியது. தென் அமெரிக்க நாடுகள் மற்றும் ஆபிரிக்க நாடுகளில் "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற கூற்றுக்கு அமைய வலுவாக தனது காலை அங்கு பதித்தது. இன்றும் இதை அமெரிக்கா செவ்வனவே தொடருகின்றது.

ஆனால் நீர் வளம் நிறைந்த இலங்கைத் திருநாட்டின் பெரும்பாலான மக்கள் சமகாலத்தில் வறுமையினால் உணவின்றித் தவிக்கின்றார்கள். ஒரு நாட்டின் முதுகெலும்பாக இருக்க வேண்டிய விவசாயத்தை கடந்த கால அரசு சீர்குலைத்ததன் பாரிய விளைவே தற்போதைய இன்னலான நிலைமைக்கு காரணம்.

ஒரு நாடு தன் மந்திரி சபையை மட்டும் விரிவாக்கம் செய்வதாலும் உலக நாடுகளிடம் தன் மக்களின் வரிப் பணத்தை மட்டும் நம்பி கடனுக்கு மேல் கடன் வாங்கிகுவிப்பதாலும் நாட்டை ஒருபோதும் பொருளாதார சரிவில் இருந்து மீட்டு விட முடியாது.

மக்களை வறுமையின் உச்ச நிலைக்கு அழைத்துச் சென்றால் வயிற்றுப் பசிக்கான புரட்சிக்கு அது வித்திடும் என்ற தத்துவஞானி அரிஸ்டோட்டின் உலக அனுபவப் பாடத்தை இலங்கை அரசு மறந்து செயற்படுவது ஒருபோதும் உகந்த செயலாக இருக்க முடியாது.

முழு அரசு இயந்திரத்தையும் அதன் ஜனநாயக மக்களையும் நாட்டில் பரவலாக ஊற்றெடுக்கும் நீர் வளத்தையும் ஒரு மலை போல் ஒன்று திரட்டி நாட்டின் விவசாயத்தில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்துவதே மக்களின் பட்டினியை போக்க எதிர்காலத்தில் ஒரு சிறந்த உபாயமாகும்.

சங்ககால தமிழ் நாட்டுப் புலவரின் புலமைபோல ஆட்சிக்கு இடித்துரைக்காத அறிவுப்புலமை சமகாலத்தில் இலங்கையில் வலுப் பெற்றிருக்கின்றது. இனவாதம், மதவாதத்திற்கு தூபமிட்டு எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றும் அறிவுக் கொழுந்துகள் இங்கு அதிகம் எனலாம்.

அறிவுப் புலமை சார்ந்த பேரினவாத பத்திரிகையாளர்களும் இவ்வழிதான் செல்கின்றனர். அவ்வாறின்றி ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்க முற்படும் புத்திஜீவிகளும் ஏதோவொரு வழியில் பழிவாங்கப்படுகின்றனர்.

**சாம் - ரமேஸ்குமார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதாவார்களா உலகத் தலைவர்கள்?



சமீப காலமாக உலக நாடுகள் பலவற்றிலும் பதற்றமான சூழலே நிலவி வருகிறது.

போர், எல்லைப் பிரச்சினை, ஏவுகணைச் சோதனை, போராட்டம் உள்ளிட்ட பிரச்சினைகள் ஒருபுறமிருக்க, உலகத் தலைவர்கள் சிலர் கைதாகும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப், பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் ஆகிய மூவரையும் கைது செய்ய முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இவர்கள் எந்தெந்த வழக்குகளில் சிக்கியிருக்கிறார்கள்... விரைவில் கைதாவார்களா?

### டொனால்டு ட்ரம்ப்

2006 ஆம் ஆண்டு, அமெரிக்காவின் முக்கிய ரியல் எஸ்டேட் அதிபராக இருந்த டொனால்டு ட்ரம்ப், ஆபாசப் பட நடிகை ஸ்டார்மி டேனியல்ஸை கோல்ஃப் போட்டி ஒன்றில் சந்தித்திருக்கிறார். அதன் பிறகு ட்ரம்பும் அந்த நடிகையும் நெருக்கமான உறவில் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. 2016 ஆம் ஆண்டில் ட்ரம்ப் குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட நிலையில், அவர் தன்னுடன் உறவிலிருந்ததை மீடியாக்களிடம் வெளிப்படுத்தி, பணம் பெறும் திட்டத்தைக் கையிலெடுத்திருக்கிறார் ஸ்டார்மி டேனியல்ஸ். இந்தத் தகவல் ட்ரம்பின் காதுகளை எட்ட, ஸ்டார்மியிடம் பேரம் பேசி, பணம் கொடுத்து அவர் வாயை அடைத்திருக்கிறார். இதற்காகத் தன்னுடைய வழக்கறிஞர் மூலமாக ட்ரம்ப் சட்டவிரோதமான முறையில் பணப் பரிவர்த்தனை செய்திருப்பதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

அந்தக் குற்றச்சாட்டுகளை ட்ரம்ப் தொடர்ந்து மறுத்து வந்த நிலையில், அது தொடர்பான வழக்கில் தான் கைது செய்யப்படவிருப்பதாக அவரே அறிவித்திருக்கிறார். மேலும், 'போராட்டத்துக்குத் தயாராகுங்கள்' என்று தனது ஆதரவாளர்களுக்கும் அழைப்பு விடுத்திருக்கிறார். இதனால், ட்ரம்பின் ஆதரவாளர்கள் பலரும் அமெரிக்க அரசின் சட்டத்துறை அதிகாரிகளுக்குச் சமூக வலைத்தளங்கள், ஈ-மெயில்கள் வாயிலாக மிரட்டல் விடுக்கத் தொடங்கியிருக்கின்றனர். மேலும், ட்ரம்ப் கைது செய்யப்பட்டால் எப்படியிருக்கும் எனச் செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்பட்ட புகைப்படங்களும் இணையத்தில் வைரலாகி வருகின்றன. " ட்ரம்ப் கைது செய்யப்படுவதற்கான அறிகுறிகள் அமெரிக்காவில் தென்படுகின்றன. நியூயோர்க், வோஷிங்டன் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் பொலிஸார் தயார் நிலையில் இருப்பதாகத் தெரிகிறது. 2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயாராகிக் கொண்டிருக்கும் ட்ரம்புக்கு, இந்த விவகாரம் தலைவலியாக அமைந்திருக்கிறது" என்கின்றனர் ட்ரம்ப் வழக்கை உற்று நோக்குபவர்கள்.

### இம்ரான் கான்

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிராகப் பல்வேறு வழக்குகளைப் பதிந்திருக்கிறது ஷெபாஸ் ஷெரீப் தலைமையிலான அந்த நாட்டின் அரசு. குறிப்பாக, 'பெண் நீதிபதியை மிரட்டியது', 'வெளிநாட்டுத் தலைவர்கள் வழங்கிய பரிசுப் பொருட்களை அரசுக் கருவூலத்தில் சேர்க்காமல் அதிக விலைக்கு விற்றது' ஆகிய இரண்டு வழக்குகள் தீவிரமடைந்திருக்கின்றன. இவற்றில், பரிசுப்பொருள் மோசடி வழக்கில் ஆஜராக மறுத்த இம்ரானைக் கைது செய்ய உத்தரவிட்டது பாகிஸ்தான் நீதிமன்றம். இதைத் தொடர்ந்து, காவல்துறைக்கும் இம்ரான் ஆதரவாளர்களுக்குமிடையே வெடித்த மோதலால், பாகிஸ்தானே வன்முறைக் காடானது. இதையடுத்து, நீதிமன்றத்தில் ஆஜரான இம்ரானுக்கு ஜாமீன் வழங்கப்பட்டது.

இந்த நிலையில், காவல்துறையுடன் தொடர் மோதலில் ஈடுபட்ட இம்ரானின் ஆதரவாளர்கள் பலரும் கைது செய்யப்பட்டனர். இம்ரான் கான் உட்பட அவரது நெருங்கிய வட்டத்திலுள்ள 17 பேர் மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பாய்ந்திருக்கிறது. இதனால் மீண்டும் அவரைக் கைது செய்யும் முயற்சி முடக்கி விடப்படவிருக்கிறது. நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் நிலையில், பாகிஸ்தானின் இரு பெரும் தலைவர்களும் வெளிப்படையாக மோதிக் கொண்டிருப்பதைப் பல தரப்பினரும் விமர்சித்து வருகிறார்கள்.

### விளாடிமிர் புடின்

கடந்த ஆண்டு, பெப்ரவரி 24 ஆம் திகதியன்று தொடங்கிய உக்ரைன் - ரஷ்யா போரில், தங்கள் நாட்டைச் சேர்ந்த 16,000 இற்கும் அதிகமான குழந்தைகளை, சட்டவிரோதமாகக் கடத்திச் சென்றதாக ரஷ்யா மீது குற்றம் சாட்டியது உக்ரைன். இது தொடர்பான வழக்கை நெதர்லாந்திலுள்ள சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் (ஐ.சி.சி) விசாரித்து வந்தது. விசாரணையின் முடிவில், " ரஷ்ய ஜனாதிபதி புடின் போர்க்குற்றங்களில் ஈடுபட்டிருக்கிறார்" என்றதோடு, அவருக்கு எதிராகக் கைது வாரன்ட்டையும் பிறப்பித்திருக்கிறது ஐ.சி.சி. ரஷ்யாவின் குழந்தைகள் நல ஆணையத்தின் தலைவர் மரியா லவோவா-பெலோவாவுக்கு எதிராகவும் கைது வாரன்ட் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி, "இது வரலாற்றுச் சிறப்பு மிக்க முடிவு" என்று வரவேற்றிருந்தார். 123 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐ.சி.சி யில் அமெரிக்கா உறுப்பினர் இல்லை என்றாலும், ஜோ பைடன் இந்த முடிவை வரவேற்றிருக்கிறார்.

"ஐ.சி.சி இன் முடிவு சட்டப்படி செல்லாது. இந்த முடிவை ஏற்றுக் கொள்ள முடியாது" என்று கொந்தளித்த ரஷ்யா, அந்த நீதிமன்றத்துக்கு எதிராகவே வழக்கு பதிந்திருக்கிறது. புடினுக்கு எதிராக வாதாடிய வழக்கறிஞர், கைது வாரன்ட் பிறப்பித்த நீதிபதிகள் மீது கிரிமினல் வழக்கு பதிந்து விசாரணையைத் தொடங்கியிருக்கிறது ரஷ்யாவின் உயர்மட்ட விசாரணைக்குழு. "ஐ.சி.சி இற்கு எனத் தனியாகக் காவல்துறை கிடையாது. அதன் கீழுள்ள 123 உறுப்பு நாடுகளில் புடின் கால் வைத்தால் மட்டுமே அவரைக் கைது செய்ய முடியும்.

அதற்கு, சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பும் அவசியம். அதேநேரம், உலக அளவில் செலவாக்கு மிக்க தலைவராக வலம் வரும் புடினுக்கு, இது ஒரு பின்னடைவுதான். அவர் போர்க்குற்றம் இழைத்ததாக ஐ.சி.சி தெரிவித்திருப்பதால், புடினின் மதிப்பு உலக நாடுகள் மத்தியில் குறையும். பல்வேறு நாடுகளுக்குப் பயணப்பட முடியாத சூழல் உருவாகும்" என்கிறார்கள் சர்வதேச அரசியல் பார்வையாளர்கள்.

இந்த மூவரில் ரஷ்ய ஜனாதிபதி புடின் கைதாவதற்கான வாய்ப்பு மிக மிகக் குறைவு என்றாலும், ட்ரம்ப், இம்ரான் கான் ஆகிய இருவரும் விரைவில் கைது செய்யப்பட வாய்ப்பிருக்கிறது. இந்தப் பக்கத்தை நீங்கள் புரட்டும் போது அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பெண்களுக்கும் ஐ.பி.எல் மாதிரியான தொடர் எப்போது நடக்குமெனக் கேட்டுக்கொண்டே இருந்தார்கள். நாங்களும் அதற்காகத்தான் இத்தனை வருடங்களாகக் காத்திருந்தோம். இப்போது அது சாத்தியப்பட்டிருக்கிறது. இது ஒரு கனவு மேடை. இந்த நொடியில் ஒரு கனவுலகத்தில் மிதந்து கொண்டிருப்பதைப் போல உணர்கிறேன் - வுமன்ஸ் பிரீமியர் லீக்கின் அறிமுக சீசனிலேயே சம்பியனாகியிருக்கும் மும்பை இந்தியன்ஸ் அணியின் கப்டன் ஹர்மன்ப்ரீத் கவுர் பேசிய வார்த்தைகள் இவை.

கால்பந்தின் பிரீமியர் லீக் பாணியைப் பின்பற்றி இந்தியாவில் 2008 இல் 'இந்தியன் பிரீமியர் லீக்' என்ற பெயரில் ஐ.பி.எல் கிரிக்கெட் தொடங்கப்பட்டது. வெற்றிகரமான இந்த ஐ.பி.எல் பாணியை மற்ற நாட்டு கிரிக்கெட் போர்டுகளும் பின்பற்ற, கிரிக்கெட் ஆடப்படும் பெரும்பாலான நாடுகளில் இருபது-20 லீக்குகள் உருவாகத் தொடங்கின. ஐ.பி.எல் ஆரம்பித்த காலத்திலிருந்தே பெண்களுக்கும் இதே மாதிரியான ஒரு தொடர் எப்போது தொடங்கப்படும் எனும் கேள்வியும் இருந்தது.

ஆனால், இந்தக் கேள்விக்கான பதில் இந்தியாவிலிருந்து வருவதற்கு முன்பே அவுஸ்திரேலியாவிலிருந்தும் இங்கிலாந்திலிருந்தும் வந்துவிட்டது. அவுஸ்திரேலியாவில் பிக்பேஸ் லீகில் பெண்களுக்கெனத் தனித்தொடர் எப்போதோ தொடங்கப்பட்டு விட்டது. சமீபத்தில் இங்கிலாந்தில் தொடங்கப்பட்ட 'The Hundred' தொடரை பெண்களுக்கும் சேர்த்தே தான் ஆரம்பித்தார்கள். ஆனால், அத்தனைக்கும் ஆதியான ஐ.பி.எல்லில் பெண்களுக்கென ஒரு தொடரை ஆரம்பிக்க பி.சி.சி.ஐ இற்கு 15 ஆண்டுகள் ஆகிவிட்டன.

தாமதமாயினும் இந்தத் தொடரை ஓரளவுக்கு மெச்சும் வகையிலேயே பி.சி.சி.ஐ நடத்தி முடித்திருக்கிறது. 5 அணிகள் பங்கேற்ற இந்தத் தொடரில் சிறப்பாக ஆடி டெல்லி கேப்பிட்டல்ஸ் அணியும் மும்பை இந்தியன்ஸ் அணியும் இறுதிப் போட்டியில் மோதின. மும்பை இந்தியன்ஸ் அணி சம்பியன் பட்டத்தை வென்றிருக்கிறது.

இறுதிப்போட்டி வரை முன்னேறித் தோல்வியைத் தழுவிய டெல்லி கேப்பிட்டல்ஸ் அணியும் கூட திறம்படத் தான் விளையாடியது. இவ்விரு அணிகளையும் கடந்து மற்ற அணிகளின் செயற்பாடுகள் அத்தனை சிறப்பாக இல்லை. ஸ்மிருதி மந்தனா, சோஃபி டிவைன், எல்லிஸ் பெர்ரி என சூப்பர் ஸ்டார் வீராங்கனைகள் அத்தனை பேர் இருந்தும் பெங்களூர் அணி முழுமையாக சொதப்பியிருக்கிறது. குஜராத் அணி முதல் போட்டியிலேயே தங்களின் கப்டனான பெத் மூனியைக் காயம் காரணமாக இழந்திருந்தது. அந்தச் சறுக்கலிலிருந்து மீள முடியாமல் முழுமையாக முடங்கியது. உபி வாரியர்ஸ் அணி வெற்றி, தோல்வி என மாறி மாறிப் பெற்று எப்படியோ ப்ளே ஆஃப்ஸ் வரை முன்னேறியது.

இதுவரை அறியப்படாத வீராங்கனைகளை வெளியுலகுக்கு வெளிச்சம்போட்டுக் காட்டுவதுதான் இந்த மாதிரியான தொடர்களின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். தாமதமாகத் தொடங்கப்பட்டிருந்தாலும் எல்லாவிதத்திலும் ஒரு நல்ல தாக்கத்தைச் செலுத்தக் கூடியதாகவே இந்த வுமன்ஸ் பிரீமியர் லீக் அமைந்திருந்தது. வருங்காலங்களில் இதன் வீச்சு இன்னும் பெரிதாக இருக்க வேண்டும்.

# இது ஒரு கனவு மேடை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேர் பெற்ற தாயே

முந்திப் பிறந்தவள் முத்தமிழாளெனும்
முழுமையைக் கொண்டு திகழ்பவளே எழில்
பொங்கும் உணர்விற்கு பேருவகை தந்து
செம்மொழி என்றே திகழ்பவளே

தொன்மை மொழிகள் ஆய்வினிலே
முதன்மைப் பேறாய் நிலைத்தவளே
அன்னையாகிய சேய்கள் மூவாறும்
நின்று நிலைப்பதை உலகறியும்

முதன்மைப் பொருளே எம் திருவே
முன்னை மொழியே மூத்தவளே
அன்னை எனப் புவி உயர்ந்தாயே
இனிமைத் தமிழே போற்றுகிறேன்

எம்மொழியும் அன்னைக் கீடில்லை என்று
மொழியியலாளரே விதந் துரைத்தார்
செம்மொழிப் பேற்றினைப் பெற்றுயர்ந்தே
எம் மொழி யாயிங்கு நிலைத்தவளே

இனிமைக்கும் இனியதாய் நீயே என்றும்
ஈடில்லாப் புகழுக்கும் பெருமைக்கும் நீயே
உலகிற்கே சொல்லீந்த மொழி நீ என்று
ஊருலகம் யாவிலும் பேர் பெற்ற தாயே

வளவை வளவன்.

# உன்னை நீ முன்னிலைப்படுத்து



இன்பத்தைக் கொண்டாடு
துன்பத்தை வரவேற்றுக் கொள்
கோவத்தை வெளிக்காட்டு
அழ வேண்டியிருந்தால் நன்றாக அழு
ஆனால் ஒருபோதும்
பின்வாங்கிடாதே...

காலத்தின் நகர்வோடு
நாமும் நகர்த்தப்பட்டு
செல்கிறோம் என்றால்
காலம் நமக்கான விடியலை
தன் கையில் வைத்திருப்பதாக
அர்த்தம்...

மற்றவர் பார்க்கும் கோணம்
எதுவாக இருந்தாலும்
உன் பார்வை நீ அடைய வேண்டிய
இலக்கின் மீது இருக்கட்டும்

புஸ்பாகரன்- பிரமிலா.

# மழலையின் சுதந்திரம்



செல்லமாய் சிணுங்கிடும்
சின்னஞ்சிறு மழலை
கண் பார்த்து.
கதை பேசுகிறது...
கைதட்டி விளையாடுகிறது
செல்லச் சண்டை
போடுகிறது...
கோபமாய்த் தூக்கி எறிகிறது...
எப்படிப் பேசினாலும்
பதில் பேசா பொம்மையினை...!

# நம் ஞாபகங்கள்

ஆனந்தக் கூத்தாடும்
அந்திப் பொழுதுகளை
ஆர்ப்பரிக்கும் கடலில்
வீசி-நிம்மதியாய்
கண்மூடி மூச்சு விடும்
வேளையிலே...
காலொட்டிய மணலாய்
விலகாது உறவாடுகிறது
உன்...என்...
நம் ஞாபகங்கள்...!

தமிழ்விழி,
தமிழ்நாடு.

# மௌனத்தின் தேடல்- 602



# நோக்கம் நாசமாய்

மனிதத் தொடர்பாடலுக்காய்
உருவாக்கப்பட்டது
தொலைத்தொடர்புக்
கருவிகளன்று
உணர்வுகளை மலினமாக்கும்
விடயங்களை தருகுதே
தொலைக்கருவிகளின்று
விலக நினைத்தாலும்
விடுகுதில்லையே
வலையமைப்புக்கள்.

சி.இ.அன்புதுரை.

# மௌனத்தின் தேடல்- 603



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

# பாதுகாப்பு

பக்குவமாய்
பத்து மாதம் சுமந்து
பாதுகாப்பாய்
பாராட்டி சீராட்டி வளர்த்து
பள்ளிப் பருவமதில்-உனை
பாதுகாக்க முடியவில்லையே
கண்மணியே!

திருமதி.
ஜெ.விஜயநிர்மலா,
சாங்கத்தானை.

# வாழ்க்கை வாழ்வதற்கே...

அன்று
கடித காலத்தில்
காலதாதமாயினும்
காரியங்கள் யாவும்
கச்சிதமாய் நடந்தன.
இன்று
தொடர்பாடலுடன்
தொடர்புடைய சாதனங்களின்
பாவனைகள் சாதனைகளுடன்
பாதகங்களுக்கும் துணை போவதல்
எல்லை மீறிச் செல்லும்
தொல்லைகளும் தொடர்கின்றன.

க.நாகராசா,
நுணாவில்.

# இவை ஒரு தடையா!

பால்ய விவாகம், படிக்கத் தடை,
பூப்படைந்த பெண்ணை பூட்டி வைத்தல்,
கைம்மை நோன்பு, உடன்கட்டை ஏறுதல்
பெண்மையின் வரலாற்றில் எத்தனை பூட்டுக்கள்
அத்தனை பூட்டுக்களையும் உடைத்த உனக்கு
இன்று இவை ஒரு தடையா!

பி.மதுஷ்சன்,
தையிட்டி.

# இரவுகள் வேண்டாம்

என் இரவுகள் எல்லாம்
தற்கொலை செய்யத்
துடிக்கின்றன.
பெண்ணே
அப்போது வரும் கனவுகளில்
நீ
அடிக்கடி வந்து தொல்லை
தருவதாலே.

சுப்பிரமணியம் ஜெயரூபன், பருத்தித்துறை.

# தொல்லைபேசி

மங்கை அவள் மனம் தனிலே குடி கொண்டாய்
தங்கை அவள் கல்வியிலே தடை தந்தாய்
அடக்கம் கொண்டவளை அழிவு செய்தாய்
கூடி வாழ்ந்தவளை குழப்பம் செய்தாய்
மடந்தை தனை மயக்கம் செய்தாய்
நீ தொலைபேசி அல்ல தொல்லைபேசியே

கும்பவாழியான், உடுப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இரண்டு சித்ரா பௌர்ணமிகளில் தனது வாழ்க்கையில் வித்தியாசங்கள் பல இருந்தாலும் ஒற்றுமை அம்சங்களும் சில இருப்பதைக் கண்டான் சோழர் படைத் தலைவன். பாலூர்ப் பெருந்துறையில் கால்வைத்த நிமிடத்திலிருந்து அந்தச் சித்ரா பௌர்ணமியிலும் தனக்குச் சண்டையும் சச்சரவும் வாளுக்கு வேலையும் இருந்ததென்பதையும் இந்தச் சித்ரா பௌர்ணமியிலும் அந்தத் தொந்தரவுகளுக்குக் குறை வில்லையென்பதையும் இரண்டு சித்ரா பௌர்ண மிகளிலும் இரண்டு சித்தினிப் பெண்களிடம் தன் சித்தத்தைப் பறிகொடுக்கும் படியான நிலை ஏற்பட்டுவிட்டதையும் எண்ணிப் பார்த்த இளைய பல்லவன் தனக்கு பெரும் மன உறுதியும் நிதானமும் இருப்பதாகச் சோழ நாட்டில் தனது




# கடல் புறா

காலத்தின் 55

## புதிய பொறுப்பு

வீரரும் தர்சமயம் தனது மாலுமிகளும் கொண் டாடுவதில் பொருளிருக்கிறதா என்ற சந்தேகத் துக்கும் உள்ளானான்.

பெண்களைப் பார்த்ததும் மயங்கிவிடும் அத்தனை பஞ்சை மனம் படைத்தவன் தானல்ல என்பதை இளையபல்லவன் உணர்ந்தே இருந்தான். தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட இரு மாதரும் இருவிதப்பட்ட தோற்றத் தையும் அழகையும் கொண்டவர்களாயிருந்தா லும் அந்த இருவித அழகிலும் பெரும் தூய்மை யும் காந்த சக்தியும் இருந்ததை அவன் நன்றாகப் புரிந்து கொண்டிருந்தான்.

இரு அழகிகளில் காஞ்சனாதேவி வாள் பயிற்சியுள்ள வீரப்பெண். அவள் முகத்திலும் நடையிலும் வீரம் மிகுந்த எழிலே சுடர் விட்டது. இவளோ நெஞ்சுரமிருந்தாலும் ஆயுதப் பயிற்சி யற்றவள். ஆனால் இவன் கலைப் பயிற்சி வாரி வீசும் ஆயிரமாயிரம் காந்தக் கணைகளின் சக்தி இணையற்றது என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

பெருந்துறையில் மாடியறையில் கனல் வீசும் கண்களைத் தன் மீது பாய்ச்சி வாள் முனையில் தன்னை வரவேற்று, விநாடியில் தன் வாளைக் கையிலிருந்து விசிறியோடும் வண்ணம் வாளைச் சுழற்றிய காஞ்சனா தேவியையும் கொள்ளையர் மத்தியில் அச்சமின்றி உலாவுபவளும் பசுமஞ்சள் திறத்தைப் பெற்றதால் மாலை நேரப் பூம்பாவை போல் தென்படுபவளும் காலசைவு, கண்ண சைவு, இடையசைவு இவற்றின் கலை அசைவு களாலேயே தன்னைப் பலர் முன்னிலை யில் பைத்தியம் பிடித்து நடன மண்டபத்தை நோக்கி ஓட வைத்தவளுமான மஞ்சளழகியை யும் பலமுறை திரும்பத் திரும்ப ஒப்பிட்டுப் பார்த்தும் இரு பெண்களில் எவள் சிறந்தவள் என்பதை நிர்ணயிக்கமாட்டாமல் திணறினான் அவன்.

அந்த இரண்டு பெண்கள் சித்தத்தில் சுழன்ற நேரத்தில் அழகு மயக்கத்தின் வசப்பட்ட சோழர் படைத் தலைவன் அவர்கள் தன்மீது கட்டிவிட்ட கடமைகளும் பொறுப்புகளும் எத்தன்மையவை என்பதையும் நினைத்துப் பார்த்தான். ஸ்ரீவிஜய சாம்ராஜ்ய அரியணையில் தந்தையை அமர்த்த சோழர் பேரரசின் உதவி நாடிவந்த காஞ்சனா தேவியின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்வது சோழர் படைத்தலைவன் என்ற முறையில் தனது பொறுப்பு என்பதையும் மஞ்சளழகியின் கெஞ்ச லையும் மீறி இரவு நிகழ்ச்சிக்கு வந்து அவள் தந்தைக்கும் கோட்டை மக்களுக்கும் பூர்வகுடித் தலைவர்களின் விரோதத்தைச் சம்பாதித் துக் கொடுத்ததால் ஏற்படக்கூடிய பயங்கர விளைவுகளிலிருந்து மஞ்சளழகியையும் அவளை சேர்ந்தவர்களையும் காப்பது தனது கடமையென்பதையும் அவன் உணர்ந்து கொண்டான்.

இப்படிப் பல பொறுப்புகள் அளவுக்கதிகமான பொறுப்புகள். "போர் செய்" என மன்னன் பகன்றால் படைகளை நடத்தும் பொறுப்பை மட்டுமே ஏற்க வேண்டிய படைத்தலைவனுக்கு அநாவசியமான பல பொறுப்புகள், தன்மீது சுமந்து விட்டதை அவன் எண்ணினான்.

(தொடரும்)


---

# நான் வைரமுத்து பேசுகிறேன்...

**"புகழெனில் உயிரும்**
**கொடுக்குவர்-பழியெனில்**
**உலகுடன் பெறினும்**
**கொள்ளலர்; அயர்விலர்**
**அன்ன மாட்சி யனையராகி**
**தமக்கென முயலா நோன் றாள்.**
**பிறக்கென முயலுநர் உண்மை**
**யானே**
**உண்டா லம்ம இவ்வுலகம்."**

வாழ்க்கை என்பது வாழ்வது மட்டும் அன்று; வாழ்விப்பது. சுய நலம் அறுந்துபட்ட மனதில் சூது விளையாது.

நட்பு அறமுடையதாய், காதல்



அறமுடையதாய், இல்லறம் நெறியு டையதாய், சமூகம் ஆரோக்கிய மானதாய்த் திகழ வேண்டுமெனில் தனிமனிதன் தன்னலச் சகதியி லிருந்து வெளியேற வேண்டும்.

ஒரு தேசம் படைகளால் ஆளப் படுதல் ஆகாது; அறத்தினால் தான் ஒரு தேசம் ஆளப்படுதல் வேண்டும்.

படைகள் என்பவை ஒரு நாட்டின் அறம் காக்கும் அரண்கள்; அவ்வ ளவே தமிழன் உலகிற்கு வழங்கிய உன்னதக் கருத்து இது:

**"கடுஞ்சினத்த கொல்களிறும்**
**கதழ்பரிய கலிமாவும்**
**நெடுங்கொடிய நிமிர்தேரும்**
**நெஞ்சுடைய புகழ் மறவருமென**
**நான்குடன் மாண்ட தாயினும்**
**மாண்ட அறநெறி முதற்றே**
**அரசின் கொற்றம்"**

## தமிழ் கூறு நல்லுலகு

என்ற அரசு நெறிக்குக் கோடு கிழித்துக் கொடுத்திருக்கிறான் தமி ழன்.

**"வினையே ஆடவர்க் குயிரே**
**வாணுதல் மனையுறை மகளிர்**
**க்கு ஆடவர் உயிர்."**

என்று இருபாலர் கடமைதனை எல்லை பிரித்துக் காட்டத்தான் அகம், புறம் என்ற அறிவுப் பகுப்பே பிறந்தது.

**"அகம் பெண்ணுக்குத் தலைமை தரும். புறம் ஆணுக்குத் தலைமை தரும்."**

பெண் அகம் [illegible] றுக் கொண்டாலும் அவர்களுக்கு ள்ளே அவள் சுருண்டு விடவி ல்லை. புறத்திற்கு அகத்திலிருந்தே அவள் தன் பங்கை அளித்தாள்.

கொக்குச் சிறகைப் போல் நரை த்த தலையுடைய முதியவள் ஒருத்தி தன் மகன் களத்தில், "களிறு பொருது மாண்டான்" என்று கேட்டுக் கண் ணீர் உகுக்கிறாள்.

அவள் உகுந்த கண்ணீர் சுய சோகத்திற்கோ சொட்டியதெனில் - அன்று; ஈன்ற பொழுதினும் பெரிது உவந்து சிந்திய கண்ணீர் அது.

எனவே அது களிப்புக் கண்ணீர்.

சொந்த மகனை இழந்த துக்கம் அவளைத் தொடக் கூட இல்லை.

அழுத கண்ணீர் ஆனந்தக் கண்ணீர் என்பதே அவளது சமூகப் பொறுப்புக்குச் சான்று சொல்கிறது.

அதனால்தான் இன்னொரு தமிழச்சி,

**"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே"**

என்று பாடினாள்.

பதினெண் கீழ் கணக்கிலுள்ள நீதி நூல்களெல்லாம் வெறும் உப தேசங்கள் அல்ல.

வாழ்க்கையில் வழங்கி வந்த வாய்மொழிச் சட்டங்கள்.

இறந்தவனையும் இருப்பவனை யும் பிறப்பவனையும் ஒட்டு மொத் தமாகச் சிந்தித்த சிறப்புத் தமிழின் கருத்துலகிற்கு கனம் சேர்த்திருக் கிறது.

இலக்கியம் படைப்பவன் அல் லது ஒரு சமூகப் பொதுச் சிந் தனையாளன் எல்லோருடைய சிரிப்பையும் தன் உதடுகளால் சிரித்து விடுகிறான்.

எல்லோருடைய கண்ணீரை யும் தன் கண்களால் அழுது விடு கிறான்.

ஆழ்வார்களும் நாயன்மார் களும் அழுத கதையை நான் அப்படித்தான் புரிந்து கொண்டிருக்கி றேன். அவர்களின் அழுகை பொது அழுகை.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

336

வலம்புரியின் மருத்துவச்சுடர்


# நிறையை குறைப்போம் என்று உறுதி எடுப்போம்

ஒருவர் அளவான உடல் நிறையை பேணுவது, அவர் வாழும் காலத்தை அதிகரிக்கச் செய்வதுடன் அவரின் செயற்றிறனையும் கற்கும் திறனையும் கூட்டும் என்பது பல ஆராய்ச்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. நிறையை சரியான அளவில் பேணாதவர்களுக்கு நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், பாரிச வாதம், மூட்டு சம்பந்தமான நோய்கள், நாரி சம்பந்தமான நோய்கள், புற்று நோய்கள், மாரடைப்பு, நுரையீரல் சம்பந்தமான நோய்கள், மாதவிடாய் கோளாறுகள், கர்ப்பம் தரிப்பதில் தாமதம், குடும்ப வாழ்வில் ஆரோக்கிய குறைவு போன்ற சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் ஆகும்.

சீனி, சர்க்கரை, பனங்கட்டி அல்லது இவை சேர்த்து தயாரிக்கப்பட்ட உணவுகள்அல்லது பானங்கள் போன்றவற்றை சிறிதளவு உட்கொண்டாலும் பெரும் நிறை அதிகரிப்புஏற்படும் அபாயம் காணப்படுகின்றது. காரணம் இவற்றில் இருக்கும் கலோரி அடர்த்தி அதிகமாகும். சீனி, சர்க்கரை, பனங்கட்டி என்பவற்றிக்குப் பதிலாக இனிப் பூட்டிகள்.

அல்லது சுவையூட்டிகளை பயன்படுத்தலாம். இவற்றின் சுவை சீனியை ஒத்ததாக இருக்கும் ஆனால் நிறை அதிகரிப்பு எதனையும் ஏற்படுத்தாது. நீரிழிவு இல்லாதவர்களும் இதனைப் பயன்படுத்த முடியும். சீனி, சர்க்கரை, பனங்கட்டி போன்றவற்றுடன் ஒப்பிடும் போது இந்த இனிப் பூட்டிகள் பாதுகாப்பானவை மட்டுமல்ல நிறை அதிகரிப்பையும் ஏற்படுத்த மாட்டாது.

இதே போன்று எண்ணெய் அல்லது எண்ணெயில் பொரித்த உணவு வகைகளும், பட்டர், மாஜரின் போன்றவற்றையும் சிறிய அளவு உணவில் சேர்த்தாலும் அதிகளவு நிறை அதிகரிப்பை ஏற்படுத்தவல்லன. நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், ஒலிவ் எண்ணெய் போன்ற எண்ணெய் வகைகள் உட்பட எல்லா எண்ணெய் வகைகளும் நிறை அதிகரிப்பை ஏற்படுத்தவல்லன. மிக்சர், வடை, ரோல்ஸ் ஏனைய பொரியல் வகைகள், தேங்காய் அதிகளவு சேர்த்த உணவு வகைகள், எண்ணெய் சேர்த்து செய்யும் உணவு வ்கைகள் போன்றவற்றில் எண்ணெயின் வீதம் அதிகமாக இருப்பதால் இவற்றில் சிறிதளவை உட்கொண்டால் கூட பெருமளவு நிறை அதிகரிப்பை ஏற்படுத்தும்.



நிறை குறைப்பு முயற்சியில் ஈடுபடுபவர்கள் சுவைக்காகவும் பசியை போக்குவதற்காகவும் ஆரோக்கியத்திற்காகவும் அடிக்கடி உண்ணக் கூடிய உணவு வகைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். பழவகை குறிப்பாக கொய்யா, தோடை, அப்பிள், ஜம்பு, விளாம்பழம், பப்பாசி, வாழைப் பழம், நாவல் போன்றன. அத்துடன் எல்லா விதமான மரக்கறி வகைகள் குறிப்பாக அகத்தி, முருங்கை, கோவா, கரட், பீற்றூட், தக்காளி, முள்ளங்கி, கீரைவகை, பயற்றை, வெங்காயம், போஞ்சி, சிறகவரை, லீக்ஸ் போன்றவை. இத்துடன் பானங்களானமோர், இனிப் பூட்டிகள் சேர்த்த சீனி சேர்க்காத தேநீர், கோப்பி, பால், தேசிக்காய் தண்ணீர், குத்தரிசிக் கஞ்சி, தோடம்பழச்சாறு, இளநீர் போன்றவற்றை குறிப்பிடல்ாம். பால், முட்டை, மீன், இறால், தானிய வகைகள் போன்றவற்றை போதியளவு உணவில் சேர்த்துக் கொள்வது நன்மை பயக்கும். இவை எமக்கு அதிகளவு புரதத்தை வழங்குவதுடன் பசியை கட்டுப்படுத்தவும் உணவில் சுவையை கூட்டுவதற்கும் உறுதுணையாக இருக்கும்.

நிறை குறைப்பதில் மட்டும் கவனம் செலுத்தாது உடல் ஆரோக்கியத்துடன் நிறை குறைப்பதில் அக்கறை செலுத்த வேண்டும். இதற்கு உடற்பயிற்சி மிகவும் உறுதுணையாக அமையும். உணவு வீணாகப் போகிறதே ஏன்ற உணர்வில் மிகுதி உணவுகளை உண்ணும் பழக்கத்தை தவிர்த்துக் கொள்ள வேண்டும். பசிக்காத வேளைகளில் மிகுதி உணவை உண்டால் உடம்பு தான் வீணாகிப்போகும்.

பிறரின் வற்புறுத்தலிற்காக உணவுஉண்ணுவதையும்உணவு உண்ணுமாறு ஒருவரை வற்புறுத்துவதை ஒரு உபசார முறையாகக் கடைப்பிடிப்பதையும் நிறுத்திக் கொள்ள வேண்டும். பசிக்காத வேளையில் ஒருவரை உண்ணுமாறு வற்புறுத்துவது அவரை நோயாளி ஆக்கும் படிமுறையாக அமைத்துவிடும். உணவு அருந்துவதற்கு 10 நிமிடங்கள் முன்னதாக பழங்களைஉண்டு அதன் பின்னர் உணவை அருந்துதல் நல்லது. இதுஉண்ணும்உணவின்அளவைக் குறைத்துக் கொள்ள உதவியாக இருப்பதுடன் போதுமான உணவு உண்ட திருப்தியை ஏற்படுத்துவதற்கும் உதவியாக இருக்கும்.

உணவை ஆறுதலாக உண்ணப் பழக வேண்டும். இது குறைந்தளவு உணவுடன் பசியைப் போக்கவும் போதுமான அளவு உணவு உண்ட திருப்தியை ஏற்படுத்தவும் உதவும். சாப்பாட்டுக் கோப்பைகளையும் கரண்டிகளையும் சிறியனவாக தெரிவு செய்து வைத்திருப்பது பயன்தரும். இதன் மூலம் அளவுக்கதிகமான உணவு உட்கொள்ளப்படுவதை குறைத்துக் கொள்ள முடியும். தேநீர் கோப்பையையும் சிறியதாக தெரிவு செய்து வைத்திருப்பது நல்லது.

தினமும் ஒரே வகையான உணவு வகைகளை உண்பதிலும் பார்க்க நிறத்தாலும், சுவையாலும், வாசனையாலும் மாறுபடும் வெவ்வேறு வகையான உணவுகளை மாறி மாறி உண்பது உடலுக்கும் மனதுக்கும் ஆரோக்கியத்தையும், புத்தூக்கத்தையும் தருவதுடன் பசியைக் கட்டுப்படுத்தி ஆரோக்கியமான நிறை குறைப்பிற்கு வழிவகுக்கும். ஒரே வகையான உணவு வகைகளை உண்ணுவதன் மூலம் எல்லா வகையான சத்துக்களையும் பெற்றுக் கொள்ள முடியாது.

முயற்சிக்கும் ஊக்கத்திற்கும் பெயர் போனவர்கள், தியாகத்திற்கு சிகரம் வைத்தவர்கள், சேமிப்பிற்கும் கொடைக்கும் இலக்கணம் வகுத்தவர்கள், கல்வியில் கரை கண்டவர்கள், நினைத்த இலக்கை அடையும் வ்ரை உழைக்கும் நெஞ்சுரம் கொண்டவர்கள் உடல் பருத்து உயிர் விடுவதா?

நிறையை குறைப்போம் என்று உறுதி எடுப்போம். அதற்கான ஆர்வத்தை விதைத்து வளர்ப்போம். உடற் பரிமாணங்களைப் பேணும் கலையை கற்றுத் தெளிவோம். இதை நடைமுறைப்படுத்ததிட சங்கற்பம் எடுப்போம்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பண்டிகைக் காலத்தை முன்னிட்டு
# சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு வீதியோர வியாபாரத்திற்கு அனுமதி

(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் சிறிய அளவிலும் பொருட்களை தயாரிக்கும் தொழில் முயற்சியாளர்கள் எவ்வித கட்டணமும் இன்றி நேற்று 1 ஆம் திகதி முதல் வீதியோரங்களில் இருந்து பொருட்களை விற்பனை செய்ய அனுமதிக்கப்படுமென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு தெரிவித்துள்ளது.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு தற்காலிகமாக இந்த அனுமதிவழங்கப்படும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, உற்பத்தியாளர்கள் ஏப்ரல் 12 ஆம் திகதி வரை வீதியோரங்களில் ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட பகுதிகளில் அந்தந்த பகுதியின் பிரதேச செயலாளரின் ஒப்புதலுடனும் மேற்பார்வையுடனும் தங்கள் பொருட்களை விற்பனை செய்ய வாய்ப்பு உள்ளது. மஹரகம நகரம் உட்பட பல இடங்களில் இவ்வாறான விசேட இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

இதே போன்று நாடளாவிய ரீதியில் ஏனைய அனைத்துப் பகுதிகளிலும் பண்டிகைக் காலம் முடியும் வரை உற்பத்தியாளர்கள் தமது பொருட்களை நேரடியாக நுகர்வோருக்கு தற்காலிகமாக விற்பனை செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும் என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (4)

## வாகனம் கவிழ்ந்து விபத்து இரு மாணவர்கள் பலி
### பதுளையில் சோகம்

(பதுளை)

ஊவா மகா வித்தியாலயத்துக்கும் பதுளை தர்மதுதா வித்தியாலயத்துக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியின் போது கப் வாகனம் ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இரண்டு மாணவர்கள் உயிரிழந்துள்ளதுடன் ஏழு மாணவர்கள் படுகாயமடைந்துள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவிக்கின்றனர். காயமடைந்தவர்கள் பதுளை பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிரிக்கெட் போட்டியின் போது வாகன அணி வகுப்பு மைதானத்தை சுற்றிச் சென்றுகொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

பதுளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4)

# மரண அறிவித்தல்

## திருமதி. சரஸ்வதி சிவஞானம்

ஓய்வுநிலை ஆசிரியை:- பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை, கொழும்பு விவேகானந்தக் கல்லூரி, திருநெல்வேலி இந்து தமிழ் பாடசாலை, முன்னாள் பொறுப்பாசிரியர் தச்சை ஐங்கரன் அறநெறிப்பாடசாலை.



அன்னார் 30.03.2023 அன்று இயற்கை எய்தியுள்ளார். இவர், அமரர்களான சின்னத்தம்பி இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், அமரர்.வேலுப்பிள்ளை சிவஞானத்தின் அன்பு மனைவியும், ஈஸ்வரி (நெல்லியடி) மற்றும் அமரர்களான தனலட்சுமி, கணபதிப்பிள்ளை, சிவகாமதேவி, சிவசெந்திநாதன், மணி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அமரரின் உடல் அவரது விருப்பப்படி யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அமரத்துவம் தொடர்பான துயர் பகிர்வு 02.04.2023 ஞாயிற்றுக்கிழமை இன்று காலை 10 மணிக்கு சிவகுடில், கரவெட்டி மத்தி, கரவெட்டி இல்லத்தில் நடைபெறும்.

அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

கரவெட்டி மத்தி, கரவெட்டி (இ-8070) -குடும்பத்தினர்-

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 180 | 140 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 250 |
| தக்காளி | 200 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 180 | 180 |
| கோவா | 80 | 120 | 100 |
| கரட் | 100 | 190 | 150 |
| பூசணி | 60 | 80 | 50 |
| புடோல் | 80 | 120 | 140 |
| வாழைக்காய் | 160 | 130 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 260 | 250 |
| பெரிய வெங்காயம் | 150 | 130 | 120 |
| பாகற்காய் | 350 | 400 | 400 |
| வெண்டக்காய் | 200 | 220 | 180 |
| கருணைக் கிழங்கு | 100 | 110 | 100 |
| பயற்றங்காய் | 180 | 150 | 120 |
| லீக்ஸ் | 200 | 240 | 300 |
| பீற்றூட் | 120 | 120 | 160 |
| கறிமிளகாய் | 300 | 300 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 100 | 800 |
| போஞ்சி | 200 | 250 | 250 |
| கத்தரிதம்புள்ள | 120 | 140 | 80 |
| கீரை – 1 பிடி | 80 | 100 | 70 |
| தேசிக்காய் | 350 | 250 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 120 |
| இராசவள்ளி | 300 | 350 | 280 |
| வெங்காயப்பூ | 180 | 140 | 200 |
| முள்ளங்கி | 60 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 |
| வல்லாரை | 50 | 30 | 40 |
| ஈரப்பலா | 120 | 130 | 150 |


JAFFNA EDUCATION FAIR 2023
Your Future Begins Here

# யாழ் கல்விக் கண்காட்சி 2023 !

இன்று ஞாயிற்றுக்கிழமை
யாழ்ப்பாணம் வலம்புரி ஹோட்டலில்!

வெற்றிகரமாக மூன்றாவது ஆண்டாகவும்
யாழ்ப்பாணத்தின் மிகப்பெரிய
உயர் கல்விக் கண்காட்சி



அடையும் வரை அவை இலக்குகளே!
கிடைக்கும் வரை அவை கனவுகளே!

அனுமதி இலவசம்!

- உயர்தரத்தின் பெறுபேறுகள் உங்கள் வெற்றிப்பயணத்துக்குத் தடை அல்ல!
- உயர்தர பரீட்சை முடிந்துவிட்டு அடுத்த கட்டத்தை நோக்கி நகரும் உங்களுக்கு சிறந்த தெரிவுகள்
- நீங்கள் வெளிநாட்டில் குடிபெயர அல்லது உயர் கல்வியை தொடர திட்டமிட்டிருந்தால், உங்களுக்கு சிறந்த களம்
- உலகின் சிறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் உள்ளூர் உயர்கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகளை நேரில் சந்தித்து உங்கள் உயர் கல்விக்கான சிறந்த பாதையை தெரிவு செய்து கொள்ளுங்கள்

(இ)

Platinum Sponsor: NORTHERN UNI, SLIIT UNI
Gold Sponsors: INFORMATICS INSTITUTE OF TECHNOLOGY, IDL, SC INTERNATIONAL STUDY CENTRE
Silver Sponsors: AQUINAS COLLEGE, edlocate www.edlocate.lk

Print Media Partner: வலம்புரி
Official Radio Partner
Supported by
Organized by EVOLUTION

மேலதிக விபரங்களுக்கு 0778866832


# பணிநிலை வேண்டுகை

கீழ்வரும் பணிநிலைகளிற்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

- கணக்காளர் - NVQ - 4 தரத்திலான கணினி அறிவு
- அலுவலக ஊழியர்கள் - NVQ - 4 தரத்திலான கணினி அறிவு
- களஞ்சிய காப்பாளர் - NVQ - 4 தரத்திலான கணினி அறிவு
- உணவக முகாமையாளர் - NVQ - 4 தரத்திலான கணினி அறிவு
- தோட்டப் பராமரிப்பாளர்கள்
- மூதாளர் பராமரிப்பாளர்கள் (ஆண், பெண்)
- சமையல் பணியாளர்கள்
- தூய்மைப் பணியாளர்கள்
- பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
- அரைக்கும் ஆலை பணியாளர்

வேலை முன் அனுபவம் தங்கி நிற்றல் விரும்பத்தக்கது.

- விண்ணப்ப முடிவுத் திகதி - 15.04.2023

விண்ணப்பப்படிவங்கள் நேரடியாக காரியாலயத்திலும் மின்னஞ்சல் ஊடாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு**
**நிலையான தொலைபேசி - 021 205 0591**
**வட்சப் இலக்கம் - 070 482 9393**
**மின்னஞ்சல் முகவரி- sivapuravalakam22 @gmail.com**

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி**
**கு.குமணன்,**
**இணைப்பாளர்,**
**அன்பே சிவம் அறக்கட்டளை,**
**சிவபுரவளாகம்.**
**A9-வீதி முகமாலை.**

(15118)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘அரசாங்கத்துடன் இணைந்தால் 200 மில்லியன் தருவோம்’

## உண்மையை போட்டுடைத்தது எதிர்க்கட்சி

(கொழும்பு)

**அரசாங்கத்துடன் இணைவதற்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு 200 மில்லியன் ரூபாய் பேரம் பேசப்பட்டதாக தகவல்கள் கிடைத்துள்ளன. எம்மில் பணத்திற்கு அடி பணிபவர்கள் எவரும் இல்லை என்பதால், எதிர்க்கட்சியிலிருந்து எவரும் அரசாங்கத்துடன் இணையப் போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.**

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஆசியாவிலேயே சிறந்த ஊழல் ஒழிப்பு சட்டம் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதனை தனிநபர் சட்ட மூலமாக கடந்த ஆண்டு மே மாதமே நான் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து விட்டேன். எனினும் அரசாங்கம் அதனை ஒழுங்கு பத்திரத்தில் உள்ளடக்கவில்லை.

எம்மால் முன்வைக்கப்பட்ட சட்ட மூலத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகள், இளைஞர்களுக்கு எதிரான உள்ளடக்கங்கள் சேர்க்கப்படவில்லை.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட 130 பேர் தொடர்பான அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அத்தோடு ஊழல் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வந்த 30 வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

ஊழல் மோசடிகளை ஒழிப்பதற்கான எந்தவொரு சட்ட மூலத்திற்கும் ஐக்கிய மக்கள் சக்தி முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம்.



கொள்ளையர்களுடன் இருந்து கொண்டு ஜனாதிபதியால் எவ்வாறு ஊழலை ஒழிக்க முடியும்? ஐக்கிய மக்கள் சக்தியிலுள்ள எவரும் பணத்திற்கு கீழ்ப் படிபவர்கள் அல்ல. எனவே எம்மிலிருந்து எவரும் அரசாங்கத்துடன் இணையப் போவதில்லை எனத் தெரிவித்தார். (4)

# மீன், சிற்றுண்டிகளின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

சந்தையில் மீன்களின் விலை 25 வீதம் அளவில் குறைவடையக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விலை குறைக்கப்பட்டமையால் முன்னர் கடற்றொழிலுக்கு செல்லாதிருந்தவர்கள் தற்போது தங்களது தொழிலை மீள ஆரம்பித்துள்ளனர்.

இதனால் கடலுணவுகள் அதிகளவில் கிடைப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை சிற்றுண்டிகளின் விலைகள் இன்று குறைக்கப்பட உள்ளதாக அகில இலங்கை சிற்றுணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை குறைக்கப்பட்டதன் இலாபத்தை பொது மக்களுக்கு வழங்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

புத்தகங்கள், அப்பியாசக் கொப்பிகள், பிஸ்கட்டுகள், சவர்க்காரம் உள்ளிட்ட பொருட்களின் அதிகரிக்கப்பட்ட விலைகளை இந்த வாரத்தில் குறைக்க சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அசேல சம்பத் சுட்டிக் காட்டியுள்ளார். (4)

# இணையவழி மோசடி தொடர்பில் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் அண்மைய நாட்களாக உடனடியாக கடன் வேண்டுமானால் இணையத்தில் பதிவிடுமாறு கோரி மோசடி செய்யும் நடவடிக்கை ஒன்று இடம்பெற்று வருவதாக அரசாங்கத்தால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் மாத்திரம் 677 கணினி குற்ற முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புடைய வெளிநாட்டவர்கள் உட்பட 27 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டில், 3,400 இணைய குற்ற முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. மேலும் 25 வெளிநாட்டவர்கள் உட்பட 263 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 14 பேர் நைஜீரிய நாட்டவர்களாகும்.

இதற்கிடையில், உடனடி கடன் வழங்குகிறோம் என்ற போர்வையில் வங்கி கணக்கு தகவல் மற்றும் தேசிய அடையாள அட்டை தகவல்களை பயன்படுத்தி மோசடி செய்த சம்பவங்களும் பதிவாகியுள்ள நிலையில் அவை தொடர்பில் அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (4)

# பெப்ரவரியில் சுற்றுலா பயணிகளால் 170 மில்லியன் டொலர் வருவாய்

(கொழும்பு)

சுற்றுலாப் பயணிகளின் வருகையின் மூலம் இலங்கையின் வருமானம் பெப்ரவரி மாதத்தில் 170 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

இது ஜனவரி மாதத்தை விட 8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அதிகம் என்பதை புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

ரஷ்யா, இந்தியா, பிரித்தானியா, ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் சுற்றுலாப் பயணிகளே பெப்ரவரி மாதத்தில் அதிகளவில் வந்துள்ளதாக தரவுகள் காட்டுகின்றன.

இதேநேரம் மார்ச் மாதத்தில் ஏற்கனவே 100,000 இற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (4)

# நீர்க் கட்டணம் செலுத்தாததால் 1.6 டிரில்லியன் நிலுவையில்

## நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

(கொழும்பு)

பல மாதங்களாக நீர் கட்டணத்தை செலுத்தத் தவறிய 40,000 இற்கும் மேற்பட்ட நுகர்வோருக்கான நீர் விநியோகத்தை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை துண்டித்துள்ளது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில், நிலுவைத் தொகை ரூ. 1.6 டிரில்லியனுக்கும் அதிகமாக உள்ளது எனவும் குறிப்பிட்டார்.

இதனால் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது தற்போது கடுமையான நிதி சிக்கல்களை எதிர் நோக்கியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (4)

# புதிய பேருந்து கட்டணத்தை அறவிட தவறினால் முறையிடுக



(கொழும்பு)

புதிய பேருந்து கட்டணத்தை அறவிடாத பேருந்துகள் தொடர்பான முறைப்பாடுகளை தெரிவிக்குமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பேருந்து கட்டணம் 12.9 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ள போதிலும் சில பேருந்துகளில் பழைய கட்டணமே வசூலிக்கப்பட்டுள்ளதாக பயணிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதனை தொடர்ந்து பேருந்து கட்டணம் தொடர்பான மக்களின் முறைப்பாடுகளை 1955 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தெரிவிக்குமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது. (4)

# அதிகளவு நீர் அருந்துங்கள்

## மருத்துவர்கள் அறிவுறுத்தல்

(கொழும்பு)

இந்த நாட்களில் அதிக வெப்பம் நிலவுவதால் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை நன்கு தண்ணீர் அருந்துமாறு பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் போஷாக்கு நிபுணர் மருத்துவர் ரேணுகா ஜயதிஸ்ஸ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் பாடசாலைக்கு செல்லும் குழந்தையின் வயதைப் பொறுத்து 4 முதல் 6 போத்தல் தண்ணீர் வரை குடிக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார். (4)

# மேலும் 10 இலட்சம் இந்திய முட்டைகள் வந்தடைந்தன



(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மேலும் 10 இலட்சம் முட்டைகள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக அரச வர்த்தக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்த முட்டைகளின் தரம் தொடர்பில் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் அனுமதி பெறப்படவுள்ளதாக அரச வர்த்தக கூட்டுத் தாபனத்தின் தலைவர் ஆசிரி வாலிசுந்தர தெரிவித்துள்ளார்.

அனுமதி கிடைத்தவுடன் பேக்கரிகள் மற்றும் ஹோட்டல்களுக்கும் இந்த முட்டைகளை விநியோகிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளிடம் கேட்க வேண்டியதைக் கேளுங்கள். ஆனால் அவர் கொடுப்பதைப் பெற்றுக்கொள்ளத் தயாராக இருங்கள் – *நார்மன் வின்சென்ட் பீல்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சர்வமதக் குழுக்களில் இருந்து உடனடியாக விலகுங்கள்!

இறைவழிபாட்டின் மூலமாக அனைத்து மனிதர்களையும் சமப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதே சமயங்களின் தோற்றுவாய்.

எனினும் சமயம் என்பது மதம் கொண்டபோது அதற்கு முதற்பலியானவர் கடவுள் என்பதுதான் உண்மை.

ஆம், எல்லோர் மீதும் அன்பு செலுத்துங்கள் என்பதை அத்தனை சமயங்களும் போதிக்கின்றன.

பிறர் மீது அன்பு செலுத்தும்போது, யார் யார் எச்சமயம் சார்ந்திருந்தாலும் அந்தப் பேதமை தேவையற்றதாகிவிடுகிறது.

ஆம், இந்த உலகில் அன்பு ஒன்றுதான் மனிதனை இறைவனாக்கவல்லது.

எனவே அனைத்து ஜீவராசிகள் மீதும் அன்பு செலுத்துகின்ற பக்குவ நிலைக்கு நாம் ஆளாகுவோமாயின் அதுவே பேரின்பப் பெருவாழ்வாகும்.

எனினும் இந்த உண்மையைப் பலரும் உணராமல் சமயத்தின் பேரால் மதம் கொண்டு பிற சமயங்களை நிந்தை செய்கின்றனர்.

அதிலும் சில சமயங்கள் மதம் மாற்றுகின்ற மிக மோசமான இழிச் செயலைச் செய்கின்றன.

போதாக்குறைக்கு ஏனைய சமயங்கள் வழிபடுகின்ற கடவுளைச் சாத்தான் என்று நாக்கூசாமல் கூறுகின்றனர்.

இவ்வாறு கூலிக்கு மாரடிக்கும் கொடியவர்களின் செயலால் மனித குலம் அவலப்பட்டுக் கிடக்கிறது.

இந்த நிலையில் இலங்கையில் சர்வமதம் என்ற பெயரில் குழு அமைத்து நடக்கின்ற சதிவேலைகள் சொல்லிமாளா.

உண்மை. பெயர் சர்வமதம் என்பதாக இருந்தாலும் அங்கு பௌத்தத்துக்கும் பௌத்த துறவிகளுக்குமே முதலிடம்.

பௌத்த துறவிகள் மேடையில் வெள்ளை விரிப்புக் கொண்ட ஆசனங்களில் அமர்ந்திருக்க, ஏனைய சமயக் குருமார்கள் சாதாரண கதிரைகளில் அமர்த்தப்படுவர்.

இதிலும் ஏனைய சமயங்கள் சைவ சமயத்தை கடைப்படுத்துவதைப் பார்க்கும்போது, இந்த உண்மையை நம்மவர்கள் எப்போதுதான் உணரப் போகின்றனர் என்று எண்ணத் தோன்றும்.

ஆக, சர்வமதம் என்ற மாயவலையில் சைவ சமயம் அகப்பட்டு தன்னிலை இழக்கிறது.

உண்மையில் சர்வமதக் குழுக்களின் நோக்கம் எல்லாச் சமயங்களும் சமம் என்பதாக இருந்தால், வெடுக்குநாறி மலையில் ஆதிலிங்கம் உடைபட்டிருக்க முடியுமா? அவ்வாறு உடைபட்டிருந்தாலும் சர்வமதக் குழுக்கள் அங்கு சென்று மீளவும் ஆதிலிங்கத்தை பிரதிஷ்டை செய்திருக்க வேண்டுமல்லவா?

இதைச் செய்யாத சர்வமதக்குழு எதற்கானது? இந்தக் குழுவில் சைவ சமயப் பிரதிநிதித்துவம் யாரின் நன்மைக்கானது.

எனவே சர்வமதக்குழுக்களில் இருந்து சைவ சமயப் பிரதிநிதிகள் உடனடியாக விலக வேண்டும்.

தமது விலகல் தொடர்பில் அவர்கள் பகிரங்கப்படுத்த வேண்டும். இது காலத்தின் கட்டாயமாகும்.

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் பன்மடங்கு மோசமானது

## யாழில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தினால் கடந்த மார்ச் 17ஆம் திகதி முன்வைக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது இப்போது உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்திலும் ப்ார்க்க பன்மடங்கு மோசமான சட்டம் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செயலமர்வு ஒன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே மேற்படி அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், பயங்கரவாத தடைச்சட்டத்தில் பிரச்சினையாக. உள்ள ஒரு விடயம் என்னவென்றால் பொலிஸாரால் பெறப்படுகின்ற ஒப்புதல் வாக்குமூலம். இந்த ஒப்புதல் வாக்குமூலம் ஒருவருக்கு எதிராக வழக்குத் தொடுக்கும் பட்சத்தில் அவருக்கு எதிரான ஆதாரமாக பாவிக்கப்படுகிறது.

இதனால்தான் கடந்த காலங்களில் கைதுசெய்யப்பட்ட பலர் சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டனர்.

இந்த ஒரு பிரிவு மாத்திரமே புதிதாக முன்வைக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் இல்லை. ஆனால் வேறு பிரச்சினைக்குரிய விடயங்கள் புல இதில் உள்ளடங்கியுள்ளன. குறிப்பாக இராணுவமயமாக்கல். ஒருவரை கைது செய்வதற்குரிய, சோதனை செய்வதற்குரிய அதிகாரத்தை இந்தச் சட்டம் இராணுவத்திற்கு கொடுக்கின்றது.

தற்போது உள்ள சட்டத்தில் தடுப்பாணையை பாதுகாப்பு அமைச்சர் தான் கொடுக்க முடியும். ஆனால் புதிதாக முன்வைக்கப்பட்ட சட்டத்தில் ஒரு உப பொலிஸ் அதிபர் தடுப்பாணையை வழங்க முடியும்.

அத்துடன் ஜனாதிபதி ஒரு இடத்தை தடுப்பு பிரதேசமாக வர்த்த மானியில் பிரசுரிக்க முடியும். அதை எவ்வளவு காலத்திற்கும் தடுத்து வைத்திருக்க முடியும். இதற்கு மேலாக ஒரு குழுவையோ அல்லது நிறுவனத்தையோ தடைசெய்யப்பட்டவையாக வர்த்தமானியில் பிரசுரிக்க முடியும்.

இதனை பொலிஸ்மா அதிபரின் பரிந்துரையோடு மாத்திரம் மேற்கொள்ள முடியும். இதில் நீதித்துறையின் செயற்பாடு மற்றும் வெளிப்படைத் தன்மை ஆகியன இல்லை.

புதிய சட்டம் ஜனாதிபதிக்கு அதிக அதிகாரத்தைக் கொடுக்கிறது.

எனவே புதிதாக முன்வைக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் பயங்கரவாத தடைச்சட்டத்திலும் பார்க்க பன் மடங்கு மோசமானதாக பார்க்கப்படுகிறது என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (ம-7,9)

## அரச ஊழியர்களுக்கு ஏப்ரல் மாத சம்பளம் 10 ஆம் திதிக்கு முன் வழங்கப்படும்

அரச ஊழியர்களுக்கான ஏப்ரல் மாத சம்பளம் எதிர்வரும் 10ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் வழங்கப்படும் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது. இம்மாதத்திற்கான அரச ஓய்வூதியம் மற்றும் சமுர்த்தி கொடுப்பனவுகள் எதிர்வரும் 10ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் வழங்கப்படும் என அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார் அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை 135 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் உள்ளுராட்சிமன்ற தேர்தலில் போட்டியிடும் அரச ஊழியர்களுக்கு ஏப்ரல் மாதத்திற்கான சம்பளத்தை முழுமையாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

## புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் மிகவும் பயங்கரமானது–மனோ

(கொழும்பு)

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் ஜனாதிபதிக்குக் கடுமையான மற்றும் கொடுமையான அதிகாரங்களை வழங்கும் வகையில் அமைந்துள்ளது என மனோகணேசன் தெரிவித்தார். ஆகவே இதனை ஒரு போதும் ஏற்கமுடியாது என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது அமுலில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விடவும், இந்த புதிய சட்டத்தில் உள்ள ஏற்பாடுகள் பயங்கரமானவை என்றும் சுட்டிக்காட்டினார். இந்தப் புதியசட்ட மூலம் பலருக்கும் பாதகமாக அமையும் என சுட்டிக்காட்டியதுடன் மக்களுக்கு போராட்டம் நடத்த முடியாத சூழலை உருவாக்கும் என்றும் எச்சரித்தார். (ம-7,9)

## விபரீத முடிவெடுத்த இளைஞன் உயிரிழப்பு சுழிபுரத்தில் சம்பவம்

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் பாண்டவட்டை பகுதியில், நேற்று மாலை 24வயதுடைய இளைஞர் ஒருவர் விபரீத முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார்.

வீட்டில் யாருமில்லாத நேரத்தில், வீட்டின் அறையினுள் அவர் இவ்வாறு தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார். இச்சம்பவம் குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9)

## வரணிப் பகுதியில் 5,500 மில்லி லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் வரணிப்பகுதியில் வைத்து 5500 மில்லி லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக நபரொருவர் முல்லைத்தீவு-பருத்தித்துறை பேருந்தில் கசிப்புடன் பயணித்து அதனை வரணிப்பகுதியில் வைத்து வியாபாரம் செய்வதாக கிடைக்கப்பெற்ற இரகசியத்தகவலின் அடிப்படையில் குறித்த கசிப்பு மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி சந்தேக நபர் வரணிப் பகுதியில் பேருந்தால் இறங்கிநடத்து சென்ற போது கசிப்பு மீட்கப்பட்டுள்ள போதிலும் சந்தேக நபர் தப்பித்துள்ளார்.

இதன் போது முதுகுப்பை ஒன்றினுள் உடைகளால் மூடப்பட்டு மறைத்து கொண்டு வரப்பட்ட 4கசிப்பு போத்தல்கள் மதுவரித் திணைக்கத்தினரால் மீட்கப்பட்டுள்ளது.

மதுவரி அத்தியட்சகர் பெரேரா மற்றும் உதவி மதுவரி ஆணையாளர் சுனில்சாந்த ஆகியோரின் வழிநடத்தலின் கீழ் சாவகச்சேரி மதுவரித் திணைக்கள சார்ஜன் மேஜர் வி.மகேஸ்வரன் தலைமையிலான குழுவினர் மேற்படி மீட்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். (ம-7,9,30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் தான் அனுப்பினாரா?

## ஓட்டிச தின சிறப்புச் சிறுகதை

"மரணவலி என்றால் இதுதானோ?" என எண்ணியபடி பிரசவ வலியால் துடித்துக் கொண்டிருந்தாள் காவியா. உயிர் வேரைப் பிடித்து உலுப்பிய வலி உச்சத்தைத் தொட்ட போது, சுற்றுச் சூழல் அனைத்தையும் மறந்து பலம் முழுவதையும் திரட்டி "அம்மா" என அலறிய கதறல் ஆஸ்பத்திரிச் சுவர்களில் மோதி எதிரொலித்த போது, காவியா உணர்வற்றுப் போனாள். மரத்துப் போன அங்கங்களில் திடீரென புதிய இரத்தம் பாய்வது போன்ற உயிர்ப்பு அவளிடம் காணப்பட்டது. காரணம் குழந்தையின் அழுகைச் சத்தம் அவளின் நாடி நரம்புகளில் புத்துணர்ச்சியை ஏற்படுத்த மெதுவாகத் தலையைத் திருப்பிப் பார்த்தாள். ரோசாப்பூவுக்குக் குட்டிக் கை, கால் வைத்து விட்டது போல் அருகில் கிடந்தது குழந்தை. அது அழுவதற்குப் பிரயத்தனப்பட்டது.

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான். பிறந்த பின்பு என்ன பிள்ளை எனப் பார்க்கலாம் என்ற திருப்தியோடு இருந்தவள். பிறந்தது ஆண்குழந்தை என்பதை இப்போது அறிந்து மிகவும் பெருமிதமடைந்தாள். பெண் பிறந்தால் "ஆரா", ஆண் என்றால் "துகிலன்" எனவும் பெயர் தீர்மானிக்கப்பட்டதன் படியே மாற்றமின்றி முடிவு செய்யப்பட்டிருந்தது.

ஆண்டவன் சிலருக்கு அனைத்தையும் அள்ளிக் கொடுத்து விடுகிறான். அப்படியான பாக்கியசாலிகளில் நானும் அடக்கம் என்பதை மனம் உறுதி செய்து மகிழ்ந்தது. படிப்பு, தொழில், அழகு, நல்ல கணவன்,ஆண்குழந்தை... வாழ்க்கையில் எல்லாமே கிடைத்த திருப்தியில் பூரித்தாள்.

இப்பொழுது துகிலனுக்கு மூன்று வயது முடிந்துவிட்டது.

காவியா ஒரு கொண்டாட்டத்தில் கலந்து கொண்டபோது, திடீரென அவளின் கூந்தலைப் பிடித்து இழுத்து அப்படியொரு தாக்குதலை அவள் எதிர்பார்க்கவில்லை. முரட்டுத்தனமான தாக்குதலினால் நிலைகுலைந்து விட்டாள் என்பதை விட, தாக்கியது துகிலன் என்பதை அவளால் நம்பமுடியவில்லை.

அன்று தொடக்கம் அவனின் செயற்பாடுகளில் பொருத்தப்பாடற்ற தன்மையை அவதானித்தாள்.

"காவியா, உங்கள் பிள்ளையை சாதாரண பிள்ளைகளோடு வைத்துப் படிப்பிக்க முடியாது. தயவுசெய்து மன்னித்து விடுங்கள்."

முன்பள்ளி ஆசிரியையின் விநயமான வேண்டுகோளை மறுக்க முடியவில்லை.

அக்கம் பக்கத்தினர் "விளங்காத பிள்ளை" என்ற முத்திரையும் குத்தி, அவனை விநோதப் பொருளைப் பார்ப்பது போல வேடிக்கையாகப் பார்க்கும் போது அவளுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வரும்.

துகிலனின் பெயர் உச்சரிக்கப்பட்டது. காவியா அவனை அணைத்துக் கொண்டு



உள்ளே சென்றாள்.

இருக்கையில் அமரும் படி ஸ்சைகையால் காட்டிய டொக்டர் தாரணி தாயையும் மகனையும் மாறி மாறிப் பார்த்தாள்.

காவியா பிள்ளையின் பொருத்தப்பாடற்ற செயல்களை விபரித்தாள். கட்டுப்படுத்த முடியாது கண்களிலிருந்து கண்ணீர் பொலபொலவென உருண்டோடியது.

ஏன் அழுகிறீர்கள்? உங்களுக்குக் கிடைத்திருப்பது "கிவ்ரெட் சைல்ட்". கண்ணைத் துடையுங்கோ.

எவ்வளவு அவமானங்கள்? அலட்சியங்கள்? வாழ்க்கையே போதுமென்றாகி விட்டது. நீங்களும் புண்படுத்தாதீர்கள் டொக்டர். முகத்தை இரண்டு கைகளாலும் மூடிக்கொண்டு விசும்பினாள் காவியா.

சரியான "ஸ்ரெஸ்" இல் இருக்கிறீர்கள். முதலில் உங்களை மாற்ற வேண்டும்.

நியூட்டன், ஐஸ்டீன், அப்துல்கலாம் போன்ற பிரபல்யங்கள் எல்லோரும் இப்படியிருந்து வந்தவர்கள் தான். இதனை "ஓட்டிசம்" என்பார்கள். இது நோயல்ல குறைபாடு. புலன்உணர்வுகளின் இயக்கத்தில் ஏற்பட்ட இத்தகைய குறைபாட்டைப் பயிற்சிகளினால் மாற்றலாம். எப்படி மாற்றலாம் என்பது தான் தெரியவில்லை டொக்டர்.

பொறுமை, சகிப்புத்தன்மை வேண்டும். பிள்ளையின் உலகத்திற்குள் நீங்கள் போய்த்தான் மாற்றலாம். முதலில் ஏற்றுக் கொள்ளப்பழகுங்கள். குடும்பத்திலும் சூழலிலும் கட்டாயம் இதை உருவாக்க வேண்டும். அம்மா முதலில் தன்னைத் திடப்படுத்தினால் தான் அது சாத்தியமாகும்.

வைத்திய ஆலோசனை காவியாவிற்கு ஓரளவு மனத்திடத்தைத் தந்தது.

துகிலனை மற்றவர் வியக்கும் வகையில் மாற்றுகிறேன் எனக் காவியா தனக்குத் தானே சத்தியப்பிரமாணம் செய்து கொண்டாள்.

"தளிர்" அமைப்பை உருவாக்கி இப்படியான பிள்ளைகளை இணைத்துப் பயிற்சிகள் கொடுப்பது, பெற்றோர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவது, விசேட தேவையுள்ள பிள்ளைகள் பற்றிய கருத்தரங்குக்ளில் பங்குபற்றுவது எனக் காவியா தன்னை இயங்கு நிலையில் வைத்திருந்தாள்.

வசதிகள் வரும் போது மனிதன் ஆணவம் கொண்டு ஆடுகிறான். யாருக்கு என்ன எழுதியிருக்கிறதென்று யாரறிவார்?

"றோயல்" விடுதியின் முதலாளி பேசிய பேச்சு அவளின் காதில் ஒலித்தபடி இருந்தது.

"இதுகள் மனுசப் பிள்ளைகளா? பிசாசுகள்! இவர்களைப் பார்த்தால் வாடிக்கையாளரும் வரமாட்டார்கள். இடத்தைக் காலி பண்ணுங்கோ!"

"மூன்று நாட்களுக்கும் சேர்த்துப் பணத்தை வாங்கிப் போட்டு என்ன கதைக்கிறியள்? உங்களுக்கும் இப்படிப் பிள்ளைகள் பிறக்கலாம். ஏளனம் செய்யாதீர்கள்."

"எங்கட பிள்ளைகள் டொக்டர், என்ஜினியராக இருக்கிறார்கள். இப்படி வரமாட்டார்கள். நீங்கள் போகிறீர்களா? பொலிஸ் ஐ கூப்பிடவா?"

பேச்சுப் பயிற்சிக்காக அழைத்து வந்த பிள்ளைகள் சத்தம் போட்டதை மன்னிக்க முடியாத முதலாளியின் திமிரான பேச்சினால் காவியா அதிர்ந்து போனாள்.

"துகிலன் பிறந்த போது நானும் தற்பெருமை கொண்டேன். அதற்காக இவ்வளவு பெரிய தண்டனையைக் கடவுள் தந்திருக்க வேண்டாம். பாவம் முதலாளி. அவருக்கு நல்ல புத்தியைக் கொடு தெய்வமே" மனதார அவருக்காக வேண்டினாள்.

ஐந்து வருடங்களின் பின்னர் அதே விடுதியில் துகிலனோடு வந்திருக்கிறாள்.

'கம்பியூட்டர் பிறோகிறாமிங்', 'ஆன்டிராய்ட் பிறோகிறாமிங்' மற்றும் 'மைக்ரோ கண்றோலர் பிறோகிறாமிங்' பயிற்சி நெறியில் முதல் தரத்தில் சித்தி பெற்றதால் கொழும்புப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் சான்றிதழ் பெறுவதற்கான வருகை அது. இப்பொழுது அவனிடம் நிறைய மாற்றங்களை அவதானிக்க முடிகிறது. எல்லாம் காவியாவின் சகிப்புத் தன்மையால் தான் சாத்தியமாகியது.

முதலாளியின் இருக்கையில் இளம் பெண் அமர்ந்திருக்கிறாள்.முதலாளிக்கு வேண்டியவளாக இருக்க வேண்டும் என எண்ணியபடியே அவள் அருகில் இருந்த மூன்று வயது மதிக்கத்தக்க சிறுவனைக் கூர்ந்து கவனித்தாள்.அவன் எதையோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

காவியா அந்தப் பிள்ளையின் அருகே போனாள். அவனின் கவனத்தைத் திசை திருப்ப "உங்கள் பெயர் என்ன?" அவளின் கேள்விக்குப் பதில் இல்லை. தாயின் கண்கள் கலங்கியிருந்தன.

பிள்ளை என்னவெல்லாம் செய்வானோ, அவற்றையெல்லாம் காவியா அடுக்கினாள். அந்தத் தாயின் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. சோதிடம் சொல்வது போல் அத்தனையும் சத்தியமான உண்மை.

"எப்படிச் சொல்கிறீர்கள்?"

சலிப்புடன் கலந்த புன்சிரிப்பு காவியாவின் கடைவாய்ப் பகுதியில் மின்னியது.

என்ன செய்யவேண்டும் என்பதை அக்குவேறு ஆணி வேறாகக் காவியா விபரித்தாள். முடிந்தால் வீட்டிற்கு வந்து சில பயிற்சிகளைக் காட்டிக் கொடுக்கவும் சம்மதித்தாள்.

"இந்தப் பிள்ளை இப்படித்தான் இருக்கும். அதிகம் ஆசைப்படாதீர்கள்"

பலரும் பலவாறு சொல்லி அவளைப் பலவீனப்படுத்தியிருக்கிறார்கள். முதல் தடவையாகத் தனக்கு நம்பிக்கை தரும் வார்த்தைகள் சொன்ன இந்தப் பெண் தேவகன்னியோ என எண்ணி வியந்தாள். அவளைக் கைகூப்பிக் கும்பிட்டபடியே "கடவுள் உங்களை அனுப்பியிருக்கிறார். இந்த உதவியைக் காலம் முழுவதும் மறக்க மாட்டேன்." நன்றியறிதலைத் தலைசாய்த்துத் தெரிவித்தாள் அந்தத் தாய்.

"ஓ! கடவுள்தான் அனுப்பினாரா?" காவியாவின் உதடுகள் முணுமுணுத்தன.

**ராணி சீதரன்**



முல்லைத்தீவு - குமுழமுனை மகா வித்தியாலயத்தில் சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு பகுதித் தலைவராகவும் தமிழ்ப் பாட ஆசிரியராகவும் 33 வருடகாலம் கடமையாற்றிய பாலநாதன் நகுலேஸ்வரி ஆசிரியையின் சேவைநலன் பாராட்டு விழாவும் மணிவிழாவும் குமுழமுனை மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

(படம்-சதீஸ்)

## மணல் ஏலவிற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் அரசுடைமையாக்கப்பட்ட 60 கியூப் மணல் பகிரங்க ஏலவிற்பனை எதிர்வரும் 20 ஆம் திகதியன்று முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.

---

மாங்குளம் சுற்றுலா நீதிமன்றத்தில் அரசுடைமையாக்கப்பட்ட 60 கியூப் மணல் பகிரங்க ஏலவிற்பனை எதிர்வரும் 24 ஆம் திகதியன்று காலை 9 மணிக்கு மாங்குளம் சுற்றுலா நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

# 4 கோடி பெறுமதியான கஞ்சாவுடன் இருவர் மன்னாரில் கைது

(மன்னார்)

மன்னாரில் இரு வேறு சந்தர்ப்பங்களில் 16 கிலோ கேரளக்கஞ்சா பொதிகளுடன் இரு சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்ட பொலிஸ் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட குற்றப்புலனாய்வு பிரிவிற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலைத் தொடர்ந்து மன்னார் கொன்வன்ற் வீதி மற்றும் மன்னார் தலை மன்னார் பிரதான வீதியில் [illegible] முகப்பிற்கு அருகாமையில் வைத்தும் இரு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் 16 கிலோ கேரளக் கஞ்சாவுடன் இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச் சந்தேகநபர்களிடம் பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்ட பின் கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சா மற்றும் சந்தேக நபர்களின் வாகனங்கள் என்பன மன்னார் நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (4-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பப் பெண்...

ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த யுவனேசன் விஜயலக்ஷ்மி (வயது-41) என்ற பெண்ணே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

காணிப் பிரச்சினை காரணமாக இவர் விபரீத முடிவெடுத்து உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,9)

## திருமணமாகி...

உயிரிழந்தவராவார்.

மயக்கம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டநிலையில் உயிரிழந்துள்ளார்.

இதயம் பலவீனம் அடைந்த நிலையில் அவரது இதயத் துடிப்பு நின்றுவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,9)

## ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 01/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1532
வெற்றி இலக்கங்கள்
சிம்மம் 3 5 3 8 5 3
தேசிய லொத்தர் சபை

## தன நிதானய

திகதி - 2023.04.01
சீட்டிழுப்பு இலக்கம் - 1107
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 19 65 72 82
NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

## கொவிசெத

திகதி 2023.04.01
சீட்டிழுப்பு இலக்கம் 3319
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 48 54 69 74
தேசிய லொத்தர் சபை

## மெகா பவர்

திகதி 01/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1425
வெற்றி எழுத்து K
சுப்பர் இலக்க 16
வெற்றி இலக்கங்கள் 01 50 62 70

## HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.04.01
சீட்டிழுப்பு இலக்கம் 386
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 16 23 42 47
விருச்சிகம்
தேசிய லொத்தர் சபை

## மஹஜன சம்பத

திகதி 2023/04/01
சீட்டிழுப்பு இலக்கம் 5077
ஆங்கில எழுத்து C
வெல்லப்பட்ட இலக்கங்கள் 6 4 9 4 2 1
தேசிய லொத்தர் சபை

## விலைகள்...

போது 310 ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 230 ரூபாயாக இருந்த இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ கோதுமை மாவின் விலை தற்போது 210 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளதாக அச்சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ம-7,9)

## நான் ஜனாதிபதி...

நேற்று முப்படையினருக்கான சிறப்புரை ஆற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தான் ஒருபோதும் பிரசித்தமான தீர்மானங்களை மேற்கொள்ளப் போவதில்லை எனவும், மாறாக சரியான தீர்மானங்களையே எடுப்பதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, பிரசித்தமான தீர்மானங்களினால் நாட்டிற்கு சீரழிவு மட்டுமே ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

கருத்துச் சுதந்திரத்திற்கமைய தன்னை விமர்சிக்க அனைவருக்கும் சுதந்திரம் உள்ளதென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வீதிகளில் வன்முறைகளை மேற்கொள்ள எவருக்கும் உரிமை இல்லை எனவும் வலியுறுத்தினார்.

சரியானதை செய்ய அனைவரும் பழகிக்கொள்ள வேண்டும் என்றும், அதற்கான சக்தி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ளதா என்பதை அறியவே, சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாடுகளை முதலில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததாகவும் தெரிவித்தார்.

அதனை உதாரணமாக கொண்டு சர்வதேச நாணய நிதியத்தின் திட்டங்களை நடைமுறைப்படுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் புதிய சிந்தனைகளுடன் புதிய பயணத்தை தொடர்ந்தால் 25 வருடங்களுக்குள் பெரும் அபிவிருத்தியை அடையமுடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பயங்கர்வாதத்தை வெற்றிகொண்டது போன்றே நாட்டின் பொருளாதார யுத்தத்தையும் வெற்றிகொண்டு பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த துரித நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்டார்.

அதற்காக முப்படைகளினதும் பொலிஸாரினதும் ஒத்துழைப்பு தொடர்ச்சியாக தேவையென வலியுறுத்திய ஜனாதிபதி, சட்டம் ஒழுங்கை பாதுகாக்க கடந்த காலங்களில் படையினர் வழங்கிய ஒத்துழைப்புக்களையும் பாராட்டினார்.

முப்படையினர் இந்தப் பணியை செய்யத் தவறியிருந்தால் இன்று நாடு வன்முறை நிறைந்த பூமியாக இருந்திருக்கும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அதேபோல் உலகின் பலம்வாய்ந்த நாடுகளுக்கிடையிலான போட்டித்தன்மை, இந்து சமுத்திர வலயத்தை பெரிதும் பாதிக்கும் எனவும் இலங்கையின் ஜனாதிபதி என்ற வகையில் அந்த பாதிப்பிலிருந்து இலங்கையை மீட்க முயற்சிப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். (ம-7,9)

## இன, மத...

கிடையாது" என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அமைந்துள்ள ஸ்பெயின் தூதரகத்தின் அரசியல் விவகாரப் பிரிவின் தலைவர் அல்போன்சோ ஹெரெரோ கோரளுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

மேலும், இரு தரப்பு ரீதியிலான முக்கிய விவகாரங்கள் குறித்து நீண்ட நேரம் கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

இக்கலந்துரையாடலில் எதிர்க்கட்சித் தலைவர் மேற்படி விடயத்தைத் தெரிவித்தார். (ம-7,9)

## வடக்கு, கிழக்கில்...

நேற்று மாலை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்டது.

குறித்த கூட்டத்தில், வடக்குக் கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் பௌத்த அடையாள திணிப்பு மற்றும் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் ஆகியவற்றிற்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு கிழக்கிலுள்ள 8 மாவட்டங்களிலும் போராட்டங்களை நடத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த கலந்துரையாடலில் புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் உள்ளிட்ட 7 கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதி நிதிகள் கலந்து கொண்டனர்.

எம்.ஏ.சுமந்திரன் கூட்டத்திற்கு வந்த போதும், பிறிதொரு நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டியிருந்தால் புறப்பட்டு சென்றுவிட்டார்.

அத்துடன், தென்னிந்திய திருச்சபையின் பேராயர், வேலன் சுவாமிகள், சைவ மகாசபை செயலாளர் பரா.நந்தகுமார் உள்ளிட்ட 22 பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் போராட்டங்கள் நடத்துவது தொடர்பில் அங்குள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடும் பொறுப்பு த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதனிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த போராட்டங்களை ஒழுங்கமைப்பதற்கு குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. கு.சுரேந்திரன், பா.கஜதீபன், விதுசன், க.சர்வேஸ்வரன், நிஷாந்தன், வேலன் சுவாமிகள், கலையமுதன் ஆகியோர் குழுவில் அங்கம் வகிக்கிறார்கள். (ம-7,9,33)

## சிவலிங்கத்தை...

தில் மீளவும் சிலைகள் வைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

இந்நிலையில் தொல்பொருள் திணைக்களத்தினர் அங்கு சென்று தொல்பொருள் சின்னங்களை மாற்றியமைக்க முடியாது என திட்டவட்டமாக கூறியுள்ளதுடன்,

நெடுங்கேணி பொலிஸாருக்கு தொல்பொருள் சின்னங்களை பாதுகாக்குமாறு நீதிமன்ற வழக்கு இருக்கும் நிலையில் எவ்வித பணிகளையும் முன்னெடுக்க முடியாது என தெரிவித்தனர்.

அவ்வாறு இடம்பெற்றால் சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் குறித்த இடத்திற்கு பாதுகாப்பு கோரியும் கடிதம் வழங்கியுள்ளனர். (ம-7,9,250)

## சிவலிங்கம்...

அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, ஜீவன் தொண்டமான் மற்றும் வடமாகண பிரதி பொலிஸ்மா அதிபர் உள்ளிட்டோர் இன்று வெடுக்குநாறி மலைக்கு வருகை தரவுள்ளனர். இதன் போது குறித்த ஆலய பிரதிஷ்டை தொடர்பில் தீர்க்கமான முடிவு எட்டப்பட்டு ஆலயபிரதிஷ்டை விரைவாக இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7,9,250)

## SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2052
நிறம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.04.01
தினம் சனிக்கிழமை
P 17 43 59 61
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,878,520/-
DLB www.dlb.lk

## சனிதா Shanida

சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.04.01
சீட்டிழுப்பு இல : 4213
வர்ணம் : இளம் பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,397,820/-
வெற்றி இலக்கங்கள் 03 19 39 40
ஆங்கில எழுத்து J
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## ராசி அதிர்ஷ்டம்

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,855,328/-
திகதி 2023-04-01
வெற்றி வாரம் 3764
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 03 05 37 62
மீனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,919,500/-

## லக்பிம

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
F 35 08 29 43 57
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1228
வர்ணம் சிவப்பு
திகதி 2023.04.01 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 318,336,124.20
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## සංවර්ධන වාසනාව

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 584
திகதி 2023-04-01
வர்ணம் செம்மஞ்சள்
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 07 29 39
விதி எண் 06
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 18,683,084/-
DEVELOPMENT LOTTERIES தொ. பே. : 0112 333 546/47 Web: www.dlb.lk

## அத கோடிபதி ADA KOTIPATHI

சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1878
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2023.04.01
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,438,340/-
வெற்றி இலக்கங்கள் 06 33 44 63
ஆங்கில எழுத்து N

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராஜ மருத்துவம்

பேரறிஞர் Dr.K.பாலசுப்பிரமணியம்
சிறப்பு ஆலோசகர்
மீண்டும் யாழ்ப்பாணத்தில் பக்கவாதம், மூட்டுவாதம், சூதகவாயு, நெஞ்சுக்குத்து, நெஞ்சடைப்பு, பாலியல் குறைபாடுகள், தொய்வு, நீரிழிவு, நித்திரையின்மை, மனநோய், நோவு, விஷகடிக்கு சிகிச்சை
பெற்றுக்கொள்ள **076 274 4488**
வல்லை வீதி, சங்கானை. (C-6271)

## காணி விற்பனைக்கு

இராச வீதி கோப்பாய் பகுதியில் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (15087)

**077 865 8776**

## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு இரவு நேர பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.
வயது : 30 - 65
(யாழ். நகருக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை)
தொடர்புகளுக்கு
**076 097 3121**

## பிரபல தனியார் கம்பனிக்கு தேவை

- Group Leader
  Salary - 30,000
- Team Leader
  Salary - 50,000

(15085)

**076 711 2102**

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam / IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்
OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna. (14739)
**T.P : 077 780 3970, 074 007 1970**

## ஆசிரியர் தேவை

தெல்லிப்பளையில் உள்ள புதிய கல்வி நிலையம் ஒன்றுக்காக (15082)

- விஞ்ஞானம் (தரம் 6 –11 வரை)
  (இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்)
- தரம் 01 – 05 வரை
  (இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்)

**077 834 3666**

## காணி விற்பனைக்கு

A9 வீதியில் இரண்டு ஏக்கர் உறுதிக்காணி விற்பனைக்கு உண்டு. (எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் களஞ்சியசாலை அமைப்பதற்கு தகுந்தது)
(15105)
தொடர்புகளுக்கு
**077 735 4470**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 78 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை 200,000/-
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை

(15123)

**076 733 6047**
**076 333 6079**
**076 733 6093**

## IELTS வகுப்புக்கள்

- ஒரு பிரிவில் 5 பேர் மட்டுமே
- அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள்

**6 புள்ளிகளுக்கு மேல் பெறாவிட்டால் செலுத்திய பணம் மீளளிக்கப்படும்.**

10 வருட கால தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்ற நிறுவனம்.
**WINSTAR CONSULTANTS PVT LTD**
45, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
**071 071 6979** (15073)

## உடனடி வேலை வாய்ப்புக்கள்



EXECUTIVE OFFICER

- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6275)
**V2 TRAVELS**
AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் | 0777-068-777

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6275)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 18 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**
**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 108 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 15 லட்சம் வரை

**பார்வையிடும் நேரம் :**
**காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை**
**தரகர் தேவையில்லை**
தொடர்புகளுக்கு :- ஜெயம் (15108)
**077 814 7389, 077 986 5457**

## இந்த புத்தாண்டில் காது கேளாமைக்கு சிறந்த தீர்வு



**15%** வரை தள்ளுபடி

- இலவச செவிப்புலன் பரிசோதனை மற்றும் செவிப்புலன் கருவி சோதனை
- 6 மாதங்களுக்கு இலவச பேட்டரிகள் மற்றும் உலர்த்தும் காப்ஸ்யூல்
- 2 ஆண்டுகளுக்கு இலவச காது அச்சு
- 5 ஆண்டுகள் வரை இலவச செவிப்புலன் கருவி சேவைகள்

**இரண்டு வருட விரிவான உத்தரவாதத்துடன் உலகின் நம்பர்.01 தரம் வாய்ந்த தொழில்நுட்ப செவிப்புலன் கருவிகள்**

இந்த தள்ளுபடியானது வரையறுக்கப்பட்ட செவிப்புலன் கருவிகளுக்கு ஏப்ரல் 26 வரை மட்டுமே செல்லுபடியாகும்

அருகாமையில் உள்ள விஷன் கெயார் கிளையிலிருந்து முற்பதிவினைப் பெற்றுக்கொள்ளவும்

**மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள் 076 544 1517**

விஷன் கெயா ஓப்டிகல் சேவிசஸ் (வரை) தனியார் நிறுவனம்
06, கோட் ப்ளேஸ், கொழும்பு - 07
VISION CARE HEARING SOLUTIONS
oticon life-changing technology
(C-1958)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் அச்செழு பகுதியில் 20 பரப்பு காணி விற்பனைக்குண்டு**
**நிலப்பரப்பு**

- அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன்கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது)
- 1 பரப்பின் விலை
  காப்பெற் வீதியை பிரதான முகப்பாகக் கொண்ட காணிகள் 15 இலட்சமும் 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணிகள் 14 இலட்சம் தொடக்கம் 12 இலட்சம் வரையும் உள்ளது.
- **பார்வையிடும் நேரம் :**
  **காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை**

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15108)
**077 814 7389, 077 986 5457**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.